NAVAMANI DAILY

නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

திங்கள் | 2015 ஆகஸ்ட் 03 | ஹிஜ்ரி 1436 ஷவ்வால் 17 | விலை: 15/-

12 பக்கங்கள் | மணி 01 | ஒளி 44







## அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10,000 ரூபா

# செப்டம்பர் முதல் அடிப்படை சம்பளத்தில் சேர்க்கப்படும்



அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு புதிய அரசின் கீழ் செப்டம்பர் மாதம் முதல் அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுகண்ணாவையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி பிரசாரக்கூட்டத்தில் கூறினார்.

இதன் மூலம் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியச் சம்பளம் அதிகரிப்பதோடு, அரச ஊழியர்களுக்குக் கூடுதலான கடனைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கிடைக்கின்றது என்று கூறிய பிரதமர் இதேபோன்று, தனியார் துறையினருக்கு சம்பளத்தை அதிகரிப்பதற்காக சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

பிரதமர் இங்கு மேலும் கூறியதாவது;

எந்தவொரு அரச ஊழியருக்கும் ஐந்து வருடம் சம்பளமில்லாத விடுமுறை வழங்கப்படும். வெளிநாட்டில் தொழிலுக்கோ அல்லது உள்நாட்டில் வேறு ஏதாவது முயற்சியை ஆரம்பிப்பதற்கு அரச ஊழியர்களுக்கு இதன் மூலம் வாய்ப்புக் கிட்டுகின்றது.

இன்று அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2ஆம் பக்கம்

## இன்று தபால்மூல வாக்களிப்பு



பா. மலரம்பிகை

பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளதாக

2ஆம் பக்கம்

## வஸீம் தாஜுதீனின் அடக்கஸ்தலத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு



பீ.எப்.எம்.றிஷாட்

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வஸீம் தாஜுதீனின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள தெஹிவளை

2ஆம் பக்கம்

## புளூமெண்டல் சம்பவம்: எனக்குத் தொடர்பில்லை



அருண் பிரசாந்த்

புளூமெண்டல் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்குச் சூட்டு சம்பவத்துடன்

2ஆம் பக்கம்

# முஸ்லிம்களுக்கு எம்மால் தவறு நடந்துள்ளது

## ஏற்றுக்கொள்கிறார் கோத்தாபய ராஜபக்ஷ



யூ.எல். முஸம்மில்

கடந்த ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்கு எம்மால் சிறு சிறு தவறுகள் நடந்துள்ளன. அவற்றை நாம் ஏற்றுக்கொள்வதோடு, இந்தப் பண்புகளைத் திருத்திக் கொண்டுள்ளோம் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ கூறினார்.

குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த

2ஆம் பக்கம்

# நல்லாட்சியாளர்களுக்கு ஆதரவளிக்க சந்திரிகா குமாரதுங்க தீர்மானம்

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



அ.அருண் பிரசாந்த்

இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நல்லாட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

2ஆம் பக்கம்









# லொறி குடைசாய்வு

## 22 பேருக்கு காயம் ரயில் சேவை ஸ்தம்பிதம்



கம்பளை- கெலிஓயா பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி லொறியொன்று ரயில் தண்டவாளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று காலை 10 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக அலுவலகம் தெரிவித்தது.

யாத்திரை ஒன்றுக்கு சென்ற குழுவினரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர். குறித்த சாரதியின் தூக்க கலக்கத்தின் காரணமாகவே விபத்தாகியிருக்கலாம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

காயமடைந்த 20 பேரும் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை, சிறு குழந்தை உட்பட இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை இவ்விபத்தின் காரணமாக மலையக புகையிரதங்கள் வருவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டு அலுவலகம் அறிவித்

# அல்குர்ஆனை அவதிமத்த பொதுபல வேட்பாளருக்கு எதிராக முறைப்பாடு

அநுராதபுர மாவட்ட பொதுபல சேனா அபேட்சகர் சுசந்த குமாரசிங்க அல்-குர்ஆனையும் முஸ்லிம்களையும் அவமதித்து பேசிய வெறுப்புப் பேச்சு தொடர்பாக ஆர்.ஆர்.ரி அமைப்பு தேர்தல் ஆணையாளருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் முறைப்பாடு செய்துள்ளது. ஆர்.ஆர்.ரி அமைப்பின் அங்கத்தவரான ஷாபிரஹீம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். சட்டத்தரணிகளான றுஷ்தி ஹபீப், ஸப்றாஸ் ஹமீட் ஆகியோருடன் சென்றே இந்த முறைப்பாடு செய்யப்பட்டதாக ஆர்.ஆர்.ரி அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

இதேநேரம், ஆர்.ஆர்.ரி அமைப்பின் மற்றொரு அங்கத்தவரான காதர்முகைதீன் இந்த விடயத்தை தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இது தொடர்பாக இன்று நடைபெறும் கட்சிப்பிரதிநிதிகள் கூட்டத்தில் ஆராயப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையும் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்படு செய்துள்ளதாக அதன் தலைவர் சலீம் தெரிவித்தார்.

## சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் சு.க. உறுப்பினர் தாஹிர் ஐ.தே.க.வில் இணைவு

சப்ரகமுவ மாகாண சபை சுதந்திரக் கட்சி முன்னாள் உறுப்பினர் தாஹிர் ஹாஜியார் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

ஐ.தே.க. பொதுச் செயலாளரும் கேகாலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான அமைச்சர் கபீர் ஹாசிமி ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் மாவனல்லையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் மேடை ஏறியிருந்தார் என்பதுடன் அவருடன் பிரதேச சபை உறுப்பினர் கப்பார், யாசிர் ஆகியோரும் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டார்.

மாவனல்லை உயன்வத்தையைச் சேர்ந்த தாஹிர் கடந்த காலங்களில் கேகாலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கு முன்னின்று செயற்பட்டவர்.

பெறும்பான்மை மக்கள் மத்தியிலும் செல்வாக்கு மிக்க இவர், தற்போது ஐ.தே.க.வில் இணைந்து அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு ஆதரவாக முன்னின்று செயற்பட்டு வருகின்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட கூட்டத்திலேயே இவர்கள் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டனர்.

# முன்னாள் தூதுவர் ஜாபிரின் ஜனாஸாவில் பெருந்தொகையானோர் பங்கேற்றனர்

(பேருவளை பீ.எம்.முக்தார்)

சவூதி அரேபியாவின் முன்னாள் இலங்கைத் தூதுவரும் பிரபல வர்த்தகருமான தேசபந்து நௌபல் எஸ். ஜாபிர் (78) சனியன்று கொழும்பில் காலமானார்.



பேருவளை நகர சபையின் முன்னாள் தலைவரான மர்ஹூம் எஸ்.எம்.ஜாபிரின் மகனான இவர், கொழும்பு சாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒருவராவார். சீனன் கோட்டை பெரிய பள்ளிவாசலின் தலைவரான இவர், பிரபல மாணிக்கக்கல் வர்த்தகருமாவார். பேருவளை நகரசபை முன்னாள் ஆணையாளர் மற்றும் கொழும்பு சாஹிரா கல்லூரி ஆளுனர் சபைத் தலைவர் பதவிகளையும் வகித்தார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் மனைவி பௌசியா மற்றும் மகன் முஸ்தாக், தாரிக், அல்தாப், திருமதி பாதியக யாகூத் நளிம் ஆகியோரை பிரிந்து செல்கின்றார்.

இவருடைய ஜனாஸா நேற்று மாலை சீனன்கோட்டையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அமைச்சர் எம்.எச்.எம்.பௌசி, டாக்டர் ராஜித சேனாரத்ன, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் உட்பட பெருந்தொகையான சிங்கள முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள் மற்றும் பொது மக்கள் ஜனாஸாவிற்கு கௌரவம் செலுத்தினர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் கலீபதுல் குலபா மௌலவி ஜே.அப்துல் ஹமீத் (பஹ்ஜி) ஜனாஸா தொழுகையை நடாத்த கலீபதுஷ்ஷாது லி மௌலவி அஸ்ஸெயித் அலவி மௌலானா துஆப் பிரார்த்தனை புரிந்தார்.

ஷாதுலியா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்ஷெய் அஜ்வாத் அப்துல்லாஹ் பாஸி புனித மக்காவிலிருந்து அனுதாபம் தெரிவித்துள்ளார்.

# மனிதநேயமும் சமுதாய உணர்வும் கொண்டவரே நௌபல் ஜாபிர்

## முன்னாள் அமைச்சர் இம்தியாஸ்

(பேருவளை பீ.எம். முக்தார்)

சமூக உணர்வும் மனித நேயச் சிந்தனையுமுள்ள நல்ல மனிதர்களின் இழப்புக்களால் நாம் சோர்வடைந்தாலும் அவர்களால் நாட்டுக்காகவும் சமூகத்துக்காகவும் தான் பிறந்து வளர்ந்த ஊருக்காகவும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மூலமாக நாமும் செயற்படக் கற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அல்ஹாஜ் நௌபல் எஸ். ஜாபிரின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும்கூறியிருப்பதாவது; தேசபந்து நௌபல் எஸ். ஜாபிர் இந்நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி, சமய, சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகவும் ஆற்றிய பணிகள் அழியாதவை.

முன்னணி இரத்தினக் கல் வர்த்தகரான அவர், இத்தொழிலின் மூலம் சம்பாதித்த பணத்தை சமுதாய எழுச்சி கருதி வாரிவாரி செலவு செய்தார்.

நீதியும், நேர்மையும் மனித நேயப்பண்பும் சமுதாய உணர்வும் கொண்ட அவரின் மறைவு பேருவளைப் பகுதிக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்குமே ஓர் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

மேல் மாகாண சபை உறுப்பினர்
இப்திகார் ஜெமீல் அனுதாபம்

கொடைவள்ளல் தேசபந்து நவ்பல் எஸ். ஜாபிரின் மறைவு முஸ்லிம் சமூகத்திற்கு மாபெரும் இழப்பாகும். தேசபந்து நவ்பல் எஸ். ஜாபிரின் மறைவு வெறும் அனுதாபச் செய்திகளுடன் மட்டும் முடிந்து விடும் அளவுக்கு சாதாரணமானதல்ல. அவரின் பன்முக ஆளுமைத் திறன் சிந்தனைத்திறன், பழகும் சுபாவம் தலைமைப் பண்பு என்ற குணாம்சங்கள் இன்றைய இளம் சந்ததிக்கு படிக்கட்களாகும்.

ஏழு தசாப்தங்களுக்கு மேல் வாழ்ந்த இவர், ஐந்து தசாப்தங்களாக சமூக முன்னேற்றம், நாட்டின் முன்னேற்றம் கருதி உழைத்தார்.

சீர்பெரும் சீனன்கோட்டை மக்களுக்கு தலைசிறந்த தலைமைத்துவம் வழங்கிய நவ்பல் ஜாபிர் கல்வி, ஆன்மீகப் பணிகளுக்காக தமது நிஃமத்தை வாரி செலவிட்டார்.

இரத்தினக்கல் வர்த்தகத்துறை மூலம் பேருவளையை உலகறியச் செய்த முக்கிய பிரமுகர்களில் மறைந்த மர்ஹூம் தேசபந்து நவ்பல் எஸ். ஜாபிர் முதலிடம் வகிக்கிறார. நேர்மையான வர்த்தக நடவடிக்கைகள் மூலம் உயர்வு கண்ட இப்பெரியாரது திடீர் மறைவு எம்மை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.எம். யூஸுப், எம்.எம்.எம். அம்ஜாத், பேருவளை முன்னாள் நகரபிதாக்களான மஸாஹிம் முஹம்மத், மர்ஜான் பளீல், மில்பர் கபூர் ஆகியோர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் முஸ்லிம் விவகார
இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர்

கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவரான இவர் இறக்கும் போது கல்லூரியின் வளர்ச்சிக்காகவே வேண்டி மிகவும் பாடுபட்டு உழைத்தார். தனியார் பாடசாலையாக ஸாஹிரா பிரகடனப்படுத்தப்பட்ட போது அதனை பாதுகாத்து முன்னேற்றி செல்வதற்கு முன்னாள் அதிபர் எஸ். எல். எம் சாபி மரிக்கார் அவர்களுக்கு பெரும் துணையாக நின்றார்.

கொடை வள்ளல் நளீம் ஹாஜியார் அவர்களுக்குப் பிறகு அந்த இடத்தை நிரப்பியவர் நௌபல் எஸ். ஜாபிர் ஆவார். சீனன்கோட்டை பள்ளிவாசல்களை ஒன்று சேர்த்து ஷாதுலிய்யா தரீக்காவை வளர்த்த தூண்களில் ஒருவர் ஆவார். புனித மக்காவிலுள்ள ஷாதுலியாவின் ஆன்மீகத் தலைவர்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்தார். பிரபல மாணிக்கல் வியாபாரியாக விளங்கிய மர்ஹீம் நௌபர் ஜாபிர் ஹாஜியார் மாணிக்கக்கல் மற்றும் தங்க நகை வியாபார அபிவிருத்திக்காக மிகவும் பாடுபட்டு உழைத்தவர். பண்டாரநாயக்க குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இவர் பேருவளை நகரின் விசேட ஆணையாளராகவும் பதவி வகித்து அரசியல் துறையில் பெரும் பங்காற்றியவர் ஆவார்.

பெரும்பான்மை சமூகத் தலைவர்களின் அன்பையும், மரியாதையையும் பெற்ற இவரது ஜனாஸா குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அனுதாபச் செய்தியையும் வெளியிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் அவருடைய அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதுடன், அன்னாரின் பாவங்களை எல்லாம் வல்ல இறைவன் மன்னித்து, ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் மேலான சுவர்க்கத்தை வழங்குவானாக என பிரார்த்திப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.

### புளூமெண்டல் சம்பவம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஆமி சம்பத் என்ற பாதாள உலகைச் சேர்ந்தவருக்கும், தனக்கும் எவ்வித தொடர்புமுமில்லை என்றும் இவரை யார் என்றே தெரியாதென்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு 13 புளூமெண்டால் பகுதியில் வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், கொழும்பு 14 மாதம்பிடிய பகுதியைச்சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், 13 படுகாயமடைந்தனர்.

ரவி கருணாநாயக்கவுக்கு ஆதரவாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து பல தரப்பினரும் பல்வேறு வகையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின்செய்தியாளர்சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட அக்கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் திலங்க சுமதிபால, இந்த சம்பவத்துடன் ஆமி சம்பத் என்ற பாதாள உலகைச் சேர்ந்த ஒருவருக்கு தொடர்புள்ளது என்றும் இவர் ரவி கருணாநாயக்கவுக்கு நெருங்கியவர் என்றும் இவர் ரவியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார் என்றும் பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.

மேலும், இதுதொடர்பில் பொலிஸ் மா அதிபர் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

மேற்படி சர்ச்சையை ஏற்படுத்திய இவரின் கருத்து தொடர்பில் ரவி கருணாநாயக்கவிடம் நவமணி வினவியபோதே, தனக்கு ஆமி சம்பத் யார் என்றே தெரியாது என அவர் மறுப்புத் தெரிவித்தார்.

அத்தோடு, இதுகுறித்து ஆதாரங்கள் அல்லது தகவல்கள் இருப்பின் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறும், தேவையில்லாமல் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் திலங்க சுமத்திபாலவைக் கேட்டுக் கொண்டார்.

அதுமட்டுமன்றி, மஹிந்த ராஜபக்ஷ போன்றோரே பாதாள உலகத்தினருடன் தொடர்பினை வைத்துள்ளனர் என்றும் தனக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ இந்தப் பழக்கம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அரச ஊழியர்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அது பாரிய சம்பள அதிகரிப்பாகும். அதனை பத்தாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கினோம். தனியார் துறையினரின் சம்பளத்தை 2500 ரூபாவாலும் அதிகரித்துள்ளோம். தனியார் துறையினர் இப்போது 1500ரூபாவே அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்னும் 1000 ரூபா அதிகரிக்கப்படவேண்டும். சில கம்பனிகள் கடந்த பாராளுமன்றத்தின் கீழ் அதனை நிராகரித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத்தில் அதனை சட்டமாக நிறைவேற்றுவோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு ஊழியரின் அடிப்படைச் சம்பளம் 25,000 ரூபாவாக்கப்படும் என்று கூறுகிறார். நாம் வழங்கிய பத்தாயிரம் ரூபா கொடுப்பனவைச் சேர்த்தால் அடிப்படைச் சம்பளம் 32,000 ரூபா ஆகும். அப்போது உங்களுக்கு மாதாந்தம் 31,000 ரூபா கைக்குக் கிடைக்கும். ஆகக்குறைந்த சம்பளமாக நாம் 31,000 ரூபா செலுத்துவோம் எனக் கூறும் போது மஹிந்த ராஜபக்ஷ 6,000 ரூபாவைக் குறைத்து 25,000 ரூபாவை வழங்குவதாக கூறுகிறார்.

தொழில் புரியும் மக்கள் உட்பட மத்திய தரவகுப்பினருக்காக 10 வீடுகள் நிர்மாணிக்கப்படும். இந்த வீடுகள் நியாய விலையில் வழங்கப்படும்.

முப்படையினரது ஓய்வூதியம் மறுசீரமைக்கப்பட்டுள்ளதோடு, தேர்தல் காரணமாக அதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. என்றும் பிரதமர் கூறினார்.

### வஸீம் தாஜுதீனின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முஸ்லிம் மையவாடிக்கு சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.குறித்த மையவாடிக்கு அருகாமையில் 2 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக இருந்தது. இப்பாதுகாப்பு கடந்த 4 நாட்களாக தெஹிவளை பொலிஸ் நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாரஹேன்பிட்டி சாலிகா மண்டபத்துக்கு அருகாமையில் இனந்தெரியாதோரினால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் சடலத்தை இவ் வாரம் மீண்டும் பரிசீலனைக்காக தோண்டி எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் காரில் விபத்துக்குள்ளாகி மரணமானாரா அல்லது திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்த விசாரணைகள் பொலிஸ் மா அதிபரின் விசேட பணிப்புரைக்கு அமைய, இரகசியப் பொலிஸாரால் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே இவரது சடலம் மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் தோண்டி எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் மரணம், விபத்தினால் ஏற்பட்டது ஒன்றல்ல என்றும் அது படுகொலை என்றும் இரகசிய பொலிஸார், கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் நிஷாந்த பீரிஸின் கவனத்துக்கு கடந்த திங்கட்கிழமை (27) கொண்டுவந்தனர்.

இந்நாட்டின் பிரபல்யமான அரசியல்வாதியொருவரின் மகன், இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்று சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸார் இதற்கு முன்னர் கூறியிருந்தனர்.

அவருடைய மரணம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல் உடைக்கப்பட்டு, விலா எலும்புகள் உடைக்கப்பட்டு, பாதங்கள் கழற்றப்பட்டு பாதங்கள் அசிட்டினால் ஊறவைக்கப்பட்டு, கூரிய ஆயுதத்தை கழுத்தில் ஏற்றி, மொட்ட ஆயுதத்தினால் தாக்கப்பட்டே படுகொலை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று இரகசிய பொலிஸார், நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

வெள்ளவத்தை முருகன் வீதியை வசிப்பிடமாக கொண்ட றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜூதீன், நாரஹேன் பிட்டியவில் உள்ள சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் வைத்து கடந்த 2012ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி, அவர் பயணம் செய்து கொண்டிருந்த கார், திடீரென தீப்பற்றி எரிந்ததில் அவர் மரணமடைந்துவிட்டதாக அப்போது அறிக்கையிடப்பட்டிருந்தன.

எனவே, குற்றப்புலனாய்வுப் பிரிவால் கடந்த திங்களன்று நீதிமன்றத்துக்கு சமர்பிக்கப்பட்ட அறிக்கையை கருத்திற் கொண்டு, வசீமின் மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இறுதி பிரேதப் பரிசோதனை அறிக்கையை எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமர்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் நிஷாந்த பீரிஸ், நீதிமன்ற வைத்திய அதிகாரியான ஆனந்த சமரசேகரவுக்கு உத்தரவிட்டார்.

### நல்லாட்சியாளர்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

இதுதொடர்பில், நேற்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுடனும் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

மஹர சந்தியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் அர்ஜுன ரணதுங்கவின் தேர்தல் காரியாலயத்திற்கு நேற்று சந்திரிகா குமாரதுங்க திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அர்ஜுனவுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவினை அவர் எடுத்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு குறித்து அர்ஜுன தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருக்கும் அன்றி சிறந்த தலைவர்களுக்கும் மோசடியாளர்களுக்குமே இந்தத் தேர்தலில் போட்டி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் நன்கு அறிவார். நாட்டில் நிலவி வந்த குடும்ப ஆட்சியை ஒழித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி, நல்லாட்சியை ஏற்படுத்திய பெருமை சந்திரிக்காவையே சாரும் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல.

இப்படியானவர் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் எமக்கே ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளார். நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதும் பொதுத் தேர்தல் குறித்து பல விடயங்களை நாம் தீர்க்கமாக ஆலோசித்தோம் என்றார்.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார மேடையில் சந்திகா ஏறுவாரா என ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்டமைக்கு,

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த இவரே பிரதான காரணமாக இருந்தார். எவ்வாறாயினும் இவரின் ஒத்துழைப்பும் ஆதரவும் எமக்கே என்பதில் எவ்வித ஐயமுமில்லை என பதிலளித்தார்.

### இன்று தபால்மூல...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

அரசாங்க பாடசாலை ஆசிரியர்கள், வலயக்கல்வி காரியாலயங்களிலும், தேசிய பாடசாலைகளிலும் தங்களது தபால் மூல வாக்குகளை பதிவதற்கு இன்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அத்தேடு, நேற்றைய தினம் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் விசேட தினமாக சேவையில் ஈடுபட்ட அதேவேளை எதிர்வரும் 9 ஆம் திகதியும் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் விசேட தினமாக சேவைகள் மேற்கொள்ளப்படுமென மேலதிக தேர்தல் ஆணையாளர் மொஹம்மட் தெரிவித்தார்.

இதேவேளை, ஏனைய அரச ஊழியர்கள் யாவரும் தமது தபால் மூல வாக்குகளை ஓகஸ்ட் மாதம் 5, 6 ஆம் திகதிகளில் அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

3,5,6 ஆம் திகதிகளில் தபால மூல வாக்களிப்பை பதிவுச்செய்ய முடியாதவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி தமது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களில் வாக்குகளை பதிவுச்செய்ய முடியுமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தபால் மூல வாக்களிப்பு மையங்கள் சாதாரண நிலையங்கள் போல் காணப்படுவதனால் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான குழுவொன்றும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### முஸ்லிம்களுக்கு எம்மால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்குப்பொறுப்பாகவுள்ள கோதாபய ராஜபக்ஷ வாரியப்பொல மீரிஹம்படிய முஸ்லிம் கிராமத்துக்கு விஜயம் செய்த போது அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

வாரியப்பொல கூட்டுறவு சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினர் எஸ்.எல்.றியாலின் இல்லத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மேலும் பேசிய அவர் கோதாபய ராஜபக்ஷ கூறியதாவது;

இப்போது முஸ்லிம்கள் எம்மை நம்புகிறார்கள் முஸ்லிம்களின் ஆதரவு இனிவரும் காலங்களில் எமக்கு கிடைக்குமென்று நம்புகிறோம்.

இந்தச் சிறிய கிராமத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்கள மக்களோடு, அந்யோன்யமாக, ஒற்றுமையாக வாழ்வதைக்கண்டு பெருமிதம் கொள்கிறேன். இந்த அந்யோன்யம் ஒற்றுமைதான் நாட்டு நலனுக்கு தேவையானது. எனவே, நாம் அனைவரும் கோபம், குரோதம், கசப்புணர்வுகள், கட்சி வேறுபாடுகள் எது இருந்தாலும் அவைகளை களைந்து மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஒத்துழைப்போம் என்றார்.

இவ்வூருக்கு பக்கத்து முஸ்லிம் கிராமமான ஹேனகெதர முஸ்லிம் கிராமத்துக்கும் மு.பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் விஜயம் பற்றி அறிவிக்கப்பட்டதுடன், அதைத்தவிர்த்து தாமே கோத்தாபய அவர்களின் கூட்டத்துக்கு வருவதாகச் சொல்லி ஹேனகெதரயிலிருந்தும் சிலர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். வடமேல் மாகாணசபை அமைச்சர் டி.பி. ஹேரத்தும் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# உண்மையான பௌத்தர்கள் பலசேனாவிற்கு வாக்களிக்க மாட்டார்கள்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

உண்மையான பௌத்தர்கள் ஒருபோதும் பொதுபலசேனாவிற்கு வாக்களிக்கமாட்டார்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

உடுநுவர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுபலசேனா அரசியலில் களமிறங்கி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது நல்லதொரு தீர்மானமாகும். இதன் மூலம் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு எவ்வளவு என்று விளங்கும். உண்மையான பௌத்தர்கள் அவர்களை முற்றாக புறக்கணிப்பார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்னர் எமது தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் விமர்சித்திருந்தார்.

ஐக்கிய தேசிய கட்சி அனைத்து இனத்தவர்களையும் சமமாக பாதுகாக்கும் கட்சி. இந்த தேரர்களின் விமர்சனங்களை கண்டு எமது கட்சியினது அடிப்படை கொள்கைகளை மாற்ற முடியாது. மற்ற மதங்களை கௌரவிக்கும் படி பௌத்த மதம் போதிக்கிறது. நான் முஸ்லிம்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்தில் 2013 ஆம் ஆண்டு தைரியமாக குரல்கொடுத்தேன். இது முஸ்லிம்களின் வாக்குகளை எதிர்பார்த்து அல்ல என அவர் கூறினார்.



# ஆசிரியை மோதிய வாகனத்திற்கு வலை

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் கொம்மாதுறை எனுமிடத்தில் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற மர்ம வாகன விபத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார். கொம்மாதுறை பாலசுப்பிரமணியம் சதுக்கத்தைச் சேர்ந்த கலையரசி பாலச்சந்திரன் (வயது - 58) எனும் ஐயங்கேணி தமிழ் வித்தியாலய ஆசிரியையே இவ்வாறு விபத்தில் பலியாகியுள்ளார்.

மேற்படி ஆசிரியை அதிகாலையில் உடற்பயிற்சிக்காக செல்வது வழக்கம். அதேபோன்று சனிக்கிழமை அதிகாலை 4.20 மணியளவில் நெடுஞ்சாலையின் ஓரமாக உடற்பயிற்சிக்காக சென்று கொண்டிருந்தபோது வாழைச்சேனைப் பக்கமிருந்து மட்டக்களப்புப் பக்கம் வந்த கென்ரர் ரக வாகனம் இவரை மோதிவிட்டு தப்பிச்சென்றது என கொல்லப்பட்ட ஆசிரியையின் கணவர் பாலச்சந்திரன் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தலையிலும் காலிலும் காயம்பட்டு வீதியில் வீழ்ந்த ஆசிரியை உடனடியாக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.



















NAVAMANI DAILY நவமணி දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

Freelanka Media Ltd.
# 156, Hospital Road, Kalubowila, Dehiwala.
T: 0117393880, F: 0117393883, E: editornavamani@gmail.com

03RD AUGUST 2015 - MONDAY

## சித்தி நஸீமாவின் உயிர்த்தியாகம் உணர்த்தும் உண்மை என்ன?

எட்டாவது பாராளுமன்ற தேர்தலின் முதல் மனிதப் பலி கடந்த வெள்ளியன்று கொழும்பில் இடம்பெற்றது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 13பேர் காயமடைந்துள்ளனர்.

இதுவரை மிக அமைதியாக இடம்பெற்றுவந்த தேர்தல் நடவடிக்கைகளின்போது மீண்டும் வன்செயல்கள் தலைதூக்கத் தொடங்கியுள்ளதனை இச்சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நாட்டில் இதுவரை வன்முறைச் சம்பவங்கள் உட்பட தேர்தல் சட்டமீறல்கள் 840 இடம்பெற்றுள்ளதாகக் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

புளூமென்டால் வீதி சம்பவம் பாதாள உலகத் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் எனக் கூறப்படுகின்றது. மாற்றுக்கட்சி மோதலா என்பது பற்றி உறுதியான விசாரணைகளின் பின்பே தெரியவரும்.

இச்சம்பவத்தில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாயான 42வயதுடைய நஸீமா பலராலும் பேசப்படும் ஒருவராக மாறியுள்ளார். ஜனநாயக ரீதியாக தனக்குள்ள உரிமையை பயன்படுத்தச் சென்றபோதே இப்பெண்மணி பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளார். ஜனநாயகத்துக்கான போராட்டங்கள் பற்றி பதிவு செய்யும்போது இப்பெண்மணியின் பெயரும் வரலாற்றில் பதிவாகும்.

இப்பெண்மணி மாதம்பிட்டியில் சேரி வீடொன்றில் வாழ்கின்றவர். தனக்கு வீடொன்றை பெற்றுக்கொள்ளும் நோக்கிலே இடியப்பம் விற்று வாழும் இப்பெண் ரவிகருணாநயக்கவுக்கு ஆதரவு வழங்கி வருவதாக இவரது உறவினர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள்.

இச்சம்பவம் கொழும்பு மாநகரில் வாழும் மக்களது வீட்டுப் பிரச்சினை குறித்து பேசுவதற்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

கொழும்பு நகரில் ஆயிரக் கணக்கான மக்கள் இவ்வாறான சேரி வீடுகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள். வாழ்வதற்கு எவ்வித அடிப்படைவசதிகளும் இல்லாத சுகாதார சீர்கேடுகளுடன் இம்மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சுதந்திரத்துக்குப் பின் பதவியேற்ற அரசாங்கங்கள் கொழும்பு வாழ் மக்களின் இந்த நிலைமை குறித்து வெட்கப்பட வேண்டும். 21ஆம் நூற்றாண்டிலும் மக்கள் இப்படி வாழ்கிறார்களா? என்று கேள்வி எழுப்பும் அளவிற்கு மக்கள் மிக மோசமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

கொழும்பில் வாழும் முஸ்லிம்கள் பற்றி நடத்திய ஆய்வொன்றில் 63வீதமானோர் சேரி வீடுகளிலே வாழ்ந்து வருவது தெரியவந்துள்ளது. உயிரிழந்த சித்தி நஸீமாவின் வீட்டுக்குச் சென்ற அரசியல் தலைவர்களுக்கு இந்த நிலைமையை நேரில் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

பதவிக்கு வரவுள்ள அரசாங்கத்திடம் கொழும்பு வாழ் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும் என்பதனையே நாமும் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

பிரச்சினை எவ்வளவு பாரதூரமானது என்பதற்கு சிறந்த உதாரணம் பொதுவாகத் தேர்தல்களில் நேரடியாக முஸ்லிம்பெண்கள் சம்பந்தப்படுவது மிகக் குறைவாக இருந்தபோதும் தனக்கு ஒரு வீட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே சித்தி நஸீமா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தமையாகும்.

நாம் இங்கு விசேடமாக குறிப்பிடுவது; இந்த நிகழ்வுடன் கொழும்பிலே தம் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு எதிர்பார்க்கும் சித்தி நஸீமா... சீலாவதி... லட்சுமி போன்றவர்களுக்கு தேர்தலின் பின் பதவியேற்கும் அரசிலாவது தீர்வு கிட்ட வேண்டும் என்பதாகும்.

நவமணி

### வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk



# வரலாற்றுத் தவறுகள் மீண்டும் இடம்பெறுமா?



இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தொன்மையான வரலாற்றை கொண்டவர்கள். தமக்கே உரிய தனிக்கலாசாரத்தை தொடக்கம் முதல் தற்போது வரை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இந்நாட்டின் பொது அரசியல், பொது பங்கிற்கு தமது பங்கை செய்து வருகின்றவர்கள், ஜனநாயக நாடு என்ற வகையில் இந்நாட்டில் ஏனைய எல்லா இனங்களையும் போல முஸ்லிம்களாகிய எமக்கும் சமமான அந்தஸ்த்தை அரசியல் சாசனம் வழங்கியிருக்கின்றது. இதன் பெருமையை நாம் பேசியும், பாராட்டியும் வருகின்றோம்.

மாறாக போர்த்துக்கேயர், விடுதலைப்புலிகள், மகிந்த அரசு என்பன மேற்சொன்ன வரலாற்று உறவிலிருந்து சிங்கள பௌத்த, சிங்கள தமிழ், கிறிஸ்தவம் ஆகிய நெருக்கமான உறவிலிருந்து முஸ்லிம்களை தனிமைப்படுத்தி ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டமை தெளிவான சான்றாகும். மஹிந்தவின் தோல்வியை மஹிந்தவே தீர்மானித்தார். அவர் சவால் விட்டார், அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினத்தை தீர்மானித்தார். அவர் போட்டியிட்டார். அவர் தோற்றுப் போனார். தனக்கு இரண்டு வருடம் இருக்க தனது முடிவை தானே எடுக்கும் அளவுக்கு மஹிந்தவுக்கு இருந்ததெல்லாம் நம்பிக்கையும் முயற்சியுமல்ல. மாறாக இருமாப்பு. உதாரணத்துக்கு டைட்டானிக் கப்பல் தலைவர் சொன்னது போல, எந்தக் கடவுளாலும் இக்கப்பலை ஒன்றும் செய்துவிட முடியாது என்று. மஹிந்தவும் சொன்னார், என்னோடு போட்டியிடுவதற்கு யாரும் இல்லை. நான் வெரும் நிழலோடு போட்டியிடுகிறேன். மஹிந்தவின் வெற்றியை எந்தக் கடவுளாலும் தடுக்க முடியாது என்று அவரது ஆதரவாளர்களும் சொன்னார்கள். குறி, சகுணம் பார்ப்பவர்களும் சொன்னார்கள்.

ஆனால் கடவுள் அவரை தவளையின் வாயால் தவளைக்கு கேடு என்பது போல மிக இலகுவாக மஹிந்தவை தோற்கடிக்க மக்கள் மனதை மாற்றினார்கள். இங்கே அல்குர்ஆன் ஆட்சி, அதிகாரத்தை புரட்டுபவன் அல்லாஹ் என்பதை உறுதிப்படுத்தியது.

இந்நாட்டில் அப்பாவிகளான முஸ்லிம் சமூகம் பற்றிய உள்ளதும் இல்லாததுமான அபாண்டங்களை நாளுக்கு நாள் ஆள் மாறி மாறி கூலிக்கு ஆட்கள் போட்டும் முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் நாட்டின் பொதுப் பாதுகாப்பிற்கு அச்’றுத்தல் என்றும் தூள் வியாபாரிகள் என்றும் மாடறுக்கின்றவர்கள் என்றும் காட்டி, நெருக்கமான உறவு வைத்திருந்த

ஏனைய சமூகங்களில் இருந்து பிரிக்க முயற்சியெடுத்து அது தோல்வியடைய மதம் பிடித்த யானை அல்லது வெறி பிடித்த நாய் போல எங்கிருந்தோ வந்த நாய்ச்சேனையை வைத்து முஸ்லிம்கள் மீது அவதூருகளையும் அபாண்டங்களையும் சுமத்தி அத்துமீறி அடாந்தேருமளவுக்கு இந்நாட்டுக்கு முஸ்லிம்கள் செய்த அநியாயம் தான் என்ன?

அரசியல் சூழ்நிலைக்கு ஏற்பவும் தனிமனித மதிப்பீடுகளுக்கு ஏற்பவும் பௌத்தர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் கட்சி மாறி ஆள் மாறி வாக்களிப்பது சகஜம். ஒருவரை ஆதரிப்பதும், ஆதரிக்காமல் விடுவதும் அவரவர் விருப்பம். இதனை பலாத்காரத்தினால் அல்லது அற்ப - சொற்ப இலாபங்களினால் பெற முடியாது. ஓரிரு குடும்பங்களை அரசியல் ரீதியாக திருப்திப் படுத்துவதினால் ஒரு நாட்டு மொத்த சமூகத்தின் அன்பை, ஆதரவை பெற முடியாது. இது யதார்த்தம். நிலை இவ்வாறு இருக்க முஸ்லிம்களை கேவலப்படுத்திய ஓர் ஆட்சியாளனை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கு முஸ்லிம்கள் ஒருபோதும் முன்வர மாட்டார்கள். அவ்வாறானதொரு வரலாற்றுத் தவறை முஸ்லிம்கள் செய்ய மாட்டார்கள்.

ஜனாதிபதிகள் வரிசையில் அமரர் ஆர்.பிரேமதாச, சந்திரிக்கா குமாரணதுங்க ஆகியோர் வெற்றியில் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது தெளிவு. தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தேவையானோரை விரும்பியிருக்கிறார்கள். தெரிவு செய்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு துரோகிகள் அல்லர். மற்றும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பவர்களும் அல்லர் என்பதைப் புரிந்து கொள்வதுடன், பௌத்த மக்களுடன் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்ற நல்லுறவை பலாத்காரமாக நொடிப் பொழுதில் அழித்துவிட முயற்சிக்கவும் கூடாது என்ற நற்செய்தியை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் அரசியலில் முஸ்லிம்களுக்கு மாத்திரம் வாக்களிக்கும் வரலாறு என்றும் இருந்ததில்லை. மாறாக யார் தனிப்பட்ட ரீதியிலும், சகோதரர்களாகவும் தொண்டு புரிகிறார்களோ அவர்களுக்கே வாக்களிப்பர். அங்கு இனம், ஜாதி, மதம் பார்க்கப்படுவதில்லை. இது இவ்வாறிருக்க முஸ்லிம் பிரதிநிதிகளை (மிகப் பலயீனமான பிரதிநிதிகளை) களத்தில் இறக்கிவிட்டு அவர்களுக்கு வாக்களிக்குமாறு வேண்டுதல் விடுவது நகைப்புக்கிடமானது மட்டுமல்ல. அவ்வாறானவர்கள் பெறும் வாக்குகளை வைத்து முஸ்லிம்கள் எமக்கு வாக்களிக்கவில்லை என்று அதே அவசரமாக கூறியும் விடுகின்றமை கவலைக்குரியதாகும்.

உதாரணம் கொழும்பு மாவட்ட அரசியல் கலநிலவரம் இரு கட்சிகளிலும் இதனை தெளிவுபடுத்தும் எமது சமூகத்துக்கான அரசியல் வாதிகளை பெரும்பான்மைக் கட்சிகள் தீர்மானிக்கின்றபோது பல கலந்துரையாடல்கள் நிறுவன ரீதியாக அமைய வேண்டும் என்பதைத்தான் இது காண்பிக்கின்றது. இந்த தேர்தலோடு முஸ்லிம்களைப் பலாத்காரப்படுத்தி வேட்பாளர்களை திணிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பெரும்பான்மை கட்சியான இரு கட்சியும் பல ஆண்டுகளாக பலவீனர்களை முஸ்லிம் தலைவர்களாக திணித்துள்ளனர். மேல்மாகாண சபை இதற்கு நல்ல உதாரணம். வருபவர்கள் வேண்டுமானால் அரசியல் செய்துவிட்டுப் போங்கள். ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள் நாங்களே என்று எந்த அரசியல் வாதியும், கட்சித் தலைமைகளும் உரிமை கொண்டாடுவதை நிறுத்தி விடுங்கள்.

**மால்வானையூரான்**

முஸ்லிம் சமூகத்தின் பொது நன்மை யாது என்பதை முஸ்லிம் சமூக நிறுவனங்கள் பல்கலைக்கழக புத்திஜீவிகள், உலமாக்கள் போன்றவர்களை அணுகி கருத்துப் பரிமாறி முடிவுகளைப் பெறுங்கள். மாறாக முஸ்லிம் சமூக நிறுவனங்களை தமது அரசியல் பலாத்காரங்களைப் பயன்படுத்தி அடக்கியாள முட்படுவதும் அதிகாரிகளை, உலமாக்களை துச்சமாக மதிப்பதும் கடந்த கால ஆட்சியில் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தை ஒரு குடும்பம் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து இயக்கியதும் உலமா சபையை கட்டுப்படுத்தி கேவலப்படுத்த முயற்சித்தமையும் மிகக் குறைந்த முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களை ஜனாதிபதி தமது பக்கத் துறைக்கு வைத்துக் கொண்டு செயற்பட்டது. பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் சகல நிலைகளிலும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் வாயைக் கட்டி பூட்டுப் போட்டு ஆட்சியாளர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொண்டமையும்தான் கடந்த ஆட்சியில் முஸ்லிம்கள் வெறுப்படையக் காரணமாக அமைந்தது. உலமாக்கள், புத்திஜீவிகள், இதனை நன்கு அறிவர். குறைந்தது இஸ்லாம் பாடத்துக்கான ஒரு புத்தகத்தை சுதந்திரமாக எழுதி வெளியிட கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் என்பன திண்டாடியதை யாரும் மறுக்க மாட்டார்கள். இதே நிலையான அரசியலில் தெரிவுகளை முஸ்லிம்கள் புறக்கணித்து பாடம் புகட்ட வேண்டும். எம்மை அரசியல் இருப்பில் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். கொழும்பில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் மாற்றீடு செய்தாலும் அவை இடம்பெற்ற மிக மோசமான விதம் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் பாதித்தமை மறுப்பதற்கில்லை.

எந்த அரசுக்கும் சொல்கிறோம். ஆரம்பத்தில் இருந்து இன்று வரை முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு விசுவாசமாகவே நடந்துள்ளார்கள். வடகிழக்குப் போக பௌத்த பெரும்பான்மைச் சமூகத்துடனேயே ஏனைய முஸ்லிம்கள் உறவு வைத்துள்ளார்கள். ஒரு சமூகத்தால் ஏற்பட்ட பிரச்சினையின் வாசம் இன்னும் முடியவில்லை. அதன் ஆதரவை, அன்பை பெறுவதை விடுத்து ''மரத்தால் விழுந்தவனை மாடு குத்துவது'' போல் குத்தியும், குரல் வளையை நசுக்கியும் பார்க்க முயற்சிக்கும் அதே நேரத்தில் மற்றொரு சமூகத்தின் உதிரத்தின் வாசத்தைப் பார்க்க ஒரு சாரார் முயற்சிக்கிறார்கள்.

அணுகுமுறையில் மாற்றம் வேண்டும்
மனம் திறந்து பேச வேண்டும்

தான் நியமித்த கூலிக்காரனுடன் பேசுவதை விட தான் எதிரியென்று நினைப்பவனுடன் அமைதியாக ஆறுதலாகப் பேசவேண்டும்.

இவ்வாறு செயற்பட்டால் நிச்சயமாக இந்நாடு ஆசியாவின் அச்சரியமாக மாறும்.

கொழும்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு ஒரு வேண்டுகோள்-

சந்தர்ப்ப சூழ்நிலைகள் விரும்பியோ விரும்பாமலோ சிலரை அரசியலுக்குள் பிரவேசிக்கச் செய்துள்ளன. இதில் பல சர்ச்சைகள் இருக்கலாம். கடந்த கால வரலாற்றுத் தவறுகளை விடுத்து ஒற்றுமையாக அரசியல் பலத்தை ஏற்படுத்துங்கள். விதண்டா வாதங்களும், வீணான சந்தேகங்களும், தனக்குக் கிடைத்ததை எல்லாம் பேசுவதையும் விட்டு விடுங்கள். கொழும்பு முஸ்லிம்களின் தேவையை பட்டியல் படுத்துங்கள். எமது அரசியல் பிரதிநிதிகளாக முன்னிறுத்தப்பட்டவர்களோடு கலந்துரையாடி ஒப்பந்தம் செய்யுங்கள். வாக்குப் பலத்தை முழுமையாகப் பயன்படுத்துங்கள். மற்றொரு பாராளுமன்றத்தில் முஸ்லிம்களின் குரல்களை பலப்படுத்த பயிற்றுவிக்கவும் பலனடையவும் பழக்குங்கள். மற்றொரு தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கு முன் கொழும்பு மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் பயணத்துக்கு புது முகம் வரையலாம்.

புதிய பாதை காணலாம்.

புதிய உலகம் படைக்கலாம்.

ஆறு ஆண்டுகளுக்கு பொறுத்துக் கொள்ளுங்கள்.

அரசியல் வரலாற்றை மாற்றியமையுங்கள்.

முஸ்லிம்கள் பயன்படுத்துபவை முஸ்லிம்களிடம் இல்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முழு மொத்த வர்த்தக சேவையாக மாறியுள்ளது. அதற்குத் தகுதியான மேற்பார்வையாளர் தேவை.

தேசிய அரச தொலைக்காட்சியில் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு ஓரிரு மணித்தியாலயங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தூரநோக்கோடு பல உரிமைகளைப் பெறலாம். பல சலுகைகளை விட ஓர் உரிமையைப் பெறுவோம். அரசொன்றைப் பலப்படுத்துவோம். அதனூடாக சமூகத் தேவைகளைப் பெறுவோம். இதுவே வெற்றிக்கு வழியாகும்.

## சர்வதேச செய்திகள்

# கலாமுக்கு பான் கீ மூன் புகழாரம்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், ஐ.நா. சபையின் இந்தியத் தூதரகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள அப்துல் கலாம் மறைவு குறித்த இரங்கல் புத்தகத்தில், வெள்ளிக்கிழமை தனது கருத்தைப் பதிவு செய்யும் பொதுச் செயலாளர் பான் கீ மூன்.

மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசின் தலைவர் அப்துல் கலாமுக்கு ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுதொடர்பாக ஐ.நா. சபையின் இந்தியத் தூதரகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள அப்துல் கலாம் மறைவு குறித்த இரங்கல் புத்தகத்தில் பான் கி மூன் குறிப்பிட்டதாவது:

அப்துல் கலாம் மறைவையொட்டி, உலகம் முழுவதிலும் இருந்து குவிந்துவரும் இரங்கலானது, இந்தியாவின் குடியரசுத் தலைவராக பதவி வகித்தபோதும், பின்னர் அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் அவர் பெற்ற நன்மதிப்புக்கும், பிறருக்கு அளித்த ஊக்கத்துக்கும் நற்சான்றுகளாய் விளங்குகின்றன.

அவரை இழந்து வாடும் இந்திய மக்களின் சோகத்தில், ஐ.நா. சபையும் இணைந்து கொள்கிறது. அவருடைய ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்று பான் கி மூன் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், பல்வேறு நாட்டுத் தூதர்களும், அப்துல் கலாம் குறித்த தங்களுடைய கருத்துகளை அந்த இரங்கல் புத்தகத்தில் பதிவு செய்து வருகின்றனர்.

# ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு எதிராக இஸ்ரேல் புதிய உத்தி



ஈரானுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள அணுசக்தி ஒப்பந்தம் செயற்படாமல் தடுக்க, அமெரிக்க யூதர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளும் உத்தியைக் கையாள இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, அமெரிக்க யூதர்களுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விடுக்கும் கோரிக்கை நாளை மறுதினம் புதன்கிழமை இணைய தளங்களில் வெளியிடப்படவுள்ளது.

கணினிகள், கைப்பேசிகள் ஆகியவற்றின் மூலம் இந்த உரையை அனைவரும் கேட்க முடியும். அத்துடன், அமெரிக்காவுள்ள அனைத்து யூத வழிபாட்டுத் தலங்களிலும் அவரது உரை ஒளிபரப்பப்படவுள்ளது.

அமெரிக்காவின் நூற்றுக்கும் மேற்பட்ட யூத அமைப்புகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. இதுதவிர, மக்களின் கேள்விக்கு நெதன்யாகு நேரடியாக பதிலளிக்கும் நிகழ்ச்சியையும் அமெரிக்க யூதர் சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தவிருக்கிறது.

# பிரிட்டன் விமான விபத்து: ஓசாமா குடும்பத்தினர் பலி





பிரிட்டனில் தனியார் விமானமொன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த அல்-காய்தா முன்னாள் தலைவர் ஓசாமா பின்லேடன் குடும்பத்தினர் உள்ளிட்ட 4 பேர் உயிரிழந்துள்ளனர் என லண்டனிலுள்ள சவூதி அரேபியத் தூதரகம் அறிவித்துள்ளது.

பிரிட்டன் ஹாம்ப்ஷைர் நகரிலுள்ள விமான நிலையத்திலேயே கடந்த வெள்ளிக்கிழமை இவ் விமான விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ள மேற்படி தூதரகம், உயிரிழந்தவர்களில் எத்தனை பேர் பின்லேடன் குடும்பத்தினர் என்ற விவரத்தை அறிவிக்கவில்லை.

இத்தாலியிலிருந்து வந்த குறித்த பீனாம் 300 ரக ஜெட் விமானத்தை, ஹாம்ப்ஷைர் விமான தளத்தில் தரையிறக்க முயற்சித்தவேளை, விமானம் ஓடுபாதையிலிருந்து விலகி, விமான நிலையத்தையொட்டி அமைந்திருந்த கார் ஏல மையத்தின் வேலியை உரசியபடி, அந்தப் பகுதிக்குள் பாய்ந்து வெடித்துச் சிதறியது.

இதில், விமானி உட்பட அதிலிருந்த 4 பேரும் உயிரிழந்தனர். மேலும் குறித்த கார் ஏல விற்பனை நிலையத்திலிருந்த சுமார் 20 கார்கள் சேதமடைந்தன.

விபத்துக்குள்ளான விமானம், பின்லேடன் குடும்ப நிறுவனத்துக்குச் சொந்தமானது ஆகும்.

இந்த விபத்தில் பின்லேடன் குடும்பத்தினர் உயிரிழந்தது உறுதியானால், விமான விபத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழப்பது இது 3ஆவது முறையாகும். ஏற்கெனவே கடந்த 1967ஆம் ஆண்டு ஓசாமா பின்லேடனின் தந்தை முகமது பின்லேடன் சவூதி அரேபியாவில் நிகழ்ந்த விமான விபத்தில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இளவரசர் இரங்கல்: பின்லேடன் குடும்பத்தினர் உயிரிழந்ததற்கு, சவூதி தூதரான இளவரசர் முகமது பின் நவாப் அல் சவூத் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக, தூதரகத்தின் சுட்டுரை (டுவிட்டர்) வலைதளப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்லேடனின் குடும்பம் சவூதி அரேபியாவில், பெரும் செல்வாக்கையும், மிகப் பெரிய தொழில் பின்னணியையும் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து சவூதி அரேபிய ஊடகங்கள் தெரிவிக்கையில், ஓசாமா பின்லேடனின் சகோதரி சனா, வளர்ப்பு தாய் ரஜா ஹாஷிம் ஆகிய இருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளன.

விபத்தில் பின்லேடன் சகோதரி சனாவின் கணவர் ஜுஹேர் ஹாஷிமும் உயிரிழந்துள்ளார் என பிரிட்டனிலிருந்து வெளியாகும் நாளிதலொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# 8 ஆண்டுகளில் 890 கோடி சம்பாதித்த கிளிண்டன் ஜோடி!



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், அவரது மனைவியும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருமான ஹிலாரி ஆகிய இருவரும் கடந்த 8 ஆண்டுகளில் 13.90 கோடி டொலர் (சுமார் ரூ. 890 கோடி) வருமானம் ஈட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை அவர்களுடைய வருமானம் குறித்து, அமெரிக்க வருமான வரித் துறைக்கு ஹிலாரி அளித்துள்ள அறிக்கைகளிலிருந்து இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன.

2016ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஹிலாரி இதற்காக நாடு முழுவதும் ஆதரவு திரட்டி வருகிறார்.

இதையடுத்து, கடந்த 8 ஆண்டுகளுக்கான அவரது வருமானம் தொடர்பான அனைத்து விவரங்களையும் ஹிலாரி வெளியிட்டுள்ளார்.

அதில் 139.1 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 890 கோடி) வருமானத்தை அவரும் அவரது கணவர் பில் கிளிண்டனும் பெற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த வருவாயில் 35.7 சதவீத அளவை அமெரிக்க மத்திய அரசுக்கு அவர்கள் வரியாகச் செலுத்தினர். அதன் மதிப்பு 43 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 265 கோடி). மாகாண அரசுக்கு 13 மில்லியன் டொலர் (சுமார் ரூ. 83.20 கோடி) வரியாகச் செலுத்தியுள்ளனர்.

மொத்தத்தில் அவர்களது வருவாயில் 45.8 சதவீத அளவை வரியாகச் செலுத்தியுள்ளனர்.

தங்களது வருவாயில் 15 மில்லியன் டொலரை (சுமார் ரூ. 96 கோடி) நன்கொடையாக வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு மட்டுமே தங்களது வருவாயில் 11 சதவீத அளவை பல்வேறு அமைப்புகளுக்கு நன்கொடையாக இருவரும் அளித்துள்ளனர்.

அவர்களது வருவாயின் கணிசமான பகுதியை, இருவரும் உருவாக்கியுள்ள கிளிண்டன் அறக்கட்டளைக்கு நன்கொடையாக அளித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் ஆதாயம் எதிர்பார்த்து, இந்த அறக்கட்டளைக்கு வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான நன்கொடைகள் குவிகின்றன.

எந்தெந்த நடவடிக்கைகள் மூலமாக அவர் வருவாய் பெற்றார் என்பதை ஹிலாரி தனித்தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

பெருநிறுவனங்கள், ஆதரவாளர் குழுக்கள் ஆகியோரிடையே உரைகள் நிகழ்த்துவதன் மூலம் இதில் பெரும்பான்மையான தொகை கிடைத்துள்ளது.

பில் கிளிண்டன், 1993 முதல் 2001 வரை அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். அவரது மனைவி ஹிலாரி, 2009-2013 கால கட்டத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

அமைச்சர் பதவியிலிருந்து ஹிலாரி விலகிய பின்னர், பெருநிறுவனங்கள் ஏற்பாடு செய்த சிறப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டு தலைமைப் பண்பு, அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து உரையாற்றி வருகிறார்.

அதன்மூலம் பெரும் பொருள் ஈட்டி வருகிறார்.

மேலும், ஹிலாரி, பில் கிளிண்டன் எழுதிய புத்தகங்களின் விற்பனை மூலம் பெரும் தொகையை சம்பாதித்து வருகின்றனர்.

2000ஆம் ஆண்டு முதல் சிறப்புரையாற்றுவதன் மூலம் மட்டுமே இருவரும் ரூ. 320 கோடி சம்பாதித்திருப்பர் என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

அந்தக் கால கட்டத்துக்கான வருமானத்திலிருந்து, ஆண்டு சராசரியாக 31.6 சதவீதத் தொகையை வருமானவரியாக அவர்கள் செலுத்தினர்.

**ஜெர்மன் பாராளுமன்ற தேர்தல் 2017**

# பிரதமர் பதவிக்காக 4ஆவது முறை களமிறங்கும் ஏஞ்சலா மெர்கெல்



ஜெர்மனியில் 2017ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் 4ஆவது முறையாகவும் பிரதமர் பதவிக்கு ஏஞ்சலா மெர்கெல் போட்டியிடுகிறார்.

2005ஆம் ஆண்டு முதல் ஜெர்மனி பிரதமராக உள்ள ஏஞ்சலா மெர்கெலே (61), பதவி வகித்துவருகிறார்.

2017ஆம் ஆண்டில் ஜெர்மனியில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள இந்நிலையில், அதில் பிரதமர் பதவிக்கு மெர்கெல் 4ஆவது தடவையாக மீண்டும் போட்டியிட முடிவுசெய்துள்ளார்.

தனது கிறிஸ்தவ ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடவுள்ள அவர் அதற்கான தேர்தல் பிரசாரத்தை விரைவில் தொடங்குவார் என அவரின் செயலாளர் ஜெனரல் பீட்டர் தவுபர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியில் பிரதமர் பதவி வகிக்க கட்டுப்பாடுகள் இல்லை. எனவே, ஒருவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் இப்பதவிக்காக போட்டியிடலாம். மெர்கெலுக்கு முன்னதாக கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு ஹெல்மட் சோகி பிரதமராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.







# அம்பாறையில் நாம் வெற்றிபெற்றதும்

# ஹக்கீம் மு.காவை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்



சமுர்த்தி வீடமைப்பு பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அ.இ.ம.கா. வேட்பாளர் **அமீர் அலி**




ஓட்டமாவடி அஹமட் இர்ஸாட்

kaiffkutty@gmail.com


**கேள்வி:- நீங்கள் முகம் கொடுக்க இருக்கின்ற தற்போதைய தேர்தலுடன் கடந்த கால தேர்தல்களை ஒப்பிடுகின்றபொழுது உங்களுக்கான ஆதரவு கல்குடா தொகுதியில் அதிகரித்து இருக்கின்றதா?**

பதில்:- மட்டக்களப்பில் இம்முறை களமிறக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளியாக காண முடியாது. அதனால்தான் இம்மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வீழ்ச்சி ஆரம்பமாகியிருக்கின்றது. அதனோடு சேர்த்து கல்குடாவின் பிரதிநிதித்துவத்தினை இல்லாமல் செய்யும் விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முழுப்பங்கினை பெறுவதினாலும் இம்முறை கல்குடா பிரதிநிதித்துவத்தினை இல்லாதொழிக்கும் செயற்பாட்டினை அடிப்படையாக கொண்டு அமீர் அலியை தோற்கடிக்கும் கைங்கரியத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்படும் கட்சியின் தலைமையினாலது கல்குடா சமூகத்திற்கு அறிமுகமில்லாத வேட்பாளரான றியாலினை களமிறக்கியுள்ளமையினை கல்குடா மக்களும் முஸ்லிம் காங்கிரஸின் போராளிகளும் விளங்கிக் கொண்டுள்ளமையினால் சாரசாரையாக எமக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

**கேள்வி:- முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்திலே மிகப்பெரிய பொதுக் கூட்டம் ஒன்றினை அமீர்அலி விளையாட்டு மைதானத்திலே வருகின்ற கிழமை ஒழுங்கு செய்துள்ளமையானது உங்களின் வாக்கு வங்கியில் சரிவினை ஏற்படுத்துமா?**

பதில்:- நான் விளையாட்டு அரங்கினை அமைத்துள்ளேன் என்பதற்காக அதனை எனது சொந்த பணத்தில் அமையப்பெற்ற விளையாட்டு அரங்கு என்று கூற முடியாது. அது பொதுவாக எல்லோருக்கும் சொந்தமானது. ஜனநாயக வழிமுறைக்கு அமைவாக அதில் எந்த கட்சியும் கூட்டங்களை நடாத்துவதற்கு உரிமை இருக்கின்றது. அந்தவகையிலே எப்படியாவது அமீர் அலியின் வாக்குகளை சிதறடிக்க வேண்டும் என்பதற்காக வெளியூர்களில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ பணம் கொடுத்து கூட்டத்தைச் சேர்ப்பதனை போன்று ரவூப்ஹக்கீமும் அமீர் அலிக்கு எதிராக கல்குடாவில் மக்கள் அலை திரண்டுள்ளனர் என்பதனை காட்டுவதற்காக வெளியூர்களில் இருந்து மக்களை பஸ்களில் அழைத்து வர இருக்கின்றார் என்பது எமக்கு அறியக்கிடைத்துள்ளது. எவ்வாறான சதித்திட்டத்தினை முஸ்லிம் காங்கிரஸ் கல்குடா மக்களுக்கு இம்முறையும் செய்திருக்கின்றது என்பது பற்றி கல்குடா மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். சதிகாரனுக்கெல்லாம் சதிகாரன் அல்லாஹ் என்பது வருகின்ற 18ம் திகதி ஹக்கீம் விளங்கிக் கொள்வார்.

**கேள்வி:- இம்முறை தேர்தலுக்குப் பின்னர் அமீர் அலியினதும் ஹிஸ்புல்லாவினதும் அரசியல் சூனியமாக்கப்படும் என கடந்த நோன்பு பெருநாளுக்கு முதற்தினத்தன்று ஏறாவூரில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பொழுது ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளமையினை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- வேலை செய்யக்கூடிய கெட்டிக்காரர்களையோ வாய்பேசக்கூடிய தைரியமிக்கவர்களையோ கட்சியில் வைத்துக்கொள்ளவோ அல்லது அப்படியானவர்களை வேறு கட்சியிலிருந்து அரசியலினை மேற்கொள்பவர்களுக்கோ முகம்கொடுப்பதற்கு ஹக்கீமுக்கு திராணி கிடையாது. ரவூப் ஹக்கீமுக்கு தலையாட்டி பொம்மைகளையும் கறுப்பினை காட்டி வெள்ளை என்று கூறும் பொழுது அதனை ஏற்றுக்கொள்ளும் நபர்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்யும் சமூகத்தின் தேசிய தலைமை என பீத்திக்கொள்ளும் தலைவராகவே ஹக்கீம் காணப்படுகின்றார் என்பது நாடறிந்த உண்மையாக இருக்கும் அதே சமயத்தில் இம்முறை முஸ்லிம் காங்கிரஸின் இதயம் என வர்ணிக்கப்படும் அம்பாறையில் முதன் முதலாக போட்டியிடுகின்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒரு ஆசனத்தை பெற்றுக் கொள்ளும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் பொழுது ஹக்கீம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை பொறுப்பினையும் கட்சியையும் எங்களிடத்தில் தருவதே சாலச் சிறந்த விடயம் என்பதனை ஹக்கீமுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி:- அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அம்பாறை மாவட்டத்தில் ஆதரவு பெருகிவருகின்றது என கூறிம் அதே நேரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு உங்களுடைய கட்சியின் தலைவரான றிஷாத் பதியுதீன் அட்டாளைச்சேனையில் கலந்து கொண்ட கூட்டத்திற்கு அங்குள்ள சிலரினால் கல்லடி கொடுக்கப்பட்டு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதே?**

பதில்:- காய்த்த மரத்திற்குதான் கல்லடி. காய்க்காத மரத்திற்கு கல்லடி விழுவதில்லை என்பதையே எனது பதிலாக தருகின்ற அதே நேரத்தில், பதிலுக்கான காரணத்தை வருகின்ற 18ம் திகதி அறிந்து கொள்வீர்கள்.

**கேள்வி:- கல்குடாவில் முஸ்லிம் காங்கிரஸில் களமிறக்கப்பட்டுள்ள றியால் அவருடைய பிரச்சார மேடைகளில் உங்களை நேரடியாக தாக்கிப் பேசாமல் உங்களால் மேற்கொள்ளப்பட்ட நல்லவிடயங்களை பாராட்டுவதினை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில் :- வேட்பாளர் றியால் தெளிவாக பேசியிருக்கின்றார். நான் அவரை வாழ்த்துகின்றேன். அமீர் அலி திறம்பட தனது அரசியலினை செய்கின்றார். அபிவிருத்திகளை மேற்கொள்கின்றார் என்ற பார்வை றியாலிடம் இருக்குமானால் ரவூப் ஹக்கீமுக்கு படிப்பினையை பெற்றுக்கொடுக்கும் முகமாகவும் எதிர்கால கல்குடா சமூகத்தினை கருத்தில் கொண்டும் எங்களுடன் சேர்ந்து நாங்கள் முன்னெடுக்கின்ற அரசியல் பயணத்திற்கு உரமூட்டுபவராக இருந்திருக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

**கேள்வி:- கடந்த பொதுத்தேர்தலில் உங்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தேர்தலில் போட்டியிடும் கட்சியின் அதியுயர்பீட உறுப்பினரான எம்.பி.எஸ்.ஹுசைன் அவருடைய சகோதரர் வைத்தியர் அஜ்வாத் போன்றவர்களும் முக்கிய மூத்த போராளிகளும் உங்களுடைய அரசியல் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளமையினை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்:- என்னை விடவும் எனது குறைகளை விடவும் கல்குடாவின் பிரதிநித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என அவர்கள் தெளிவுகண்டுள்ளனர். ஒரு மனிதனுடைய குறை நிறைகளை பேசிக்கொள்கின்ற சந்தர்ப்பாக இதனை பார்க்காமல் இந்த மண்ணினுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டே எனது நண்பரும் உயர்பீட உறுப்பினருமான ஹுசைனும் ஆதரவாளர்களும் அதனோடு சேர்ந்து அவருடைய சகோதரரான பிரதேசத்தின் மூத்த வைத்தியராக இருக்கின்ற அஜ்வாத்தும் எவ்வித கோரிக்கைகளும் முன்வைக்காமல் கல்குடாவின் பிரதிநித்துவத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளும் பயணத்தில் எங்களுடன் கைகோர்த்துள்ளனர்.





**கேள்வி:- வேட்பாளர் றியாலினை கல்குடா மக்களுடன் கலந்தாலோசிக்காமல் முஸ்லிம் காங்கிரஸின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் களமிறக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது அது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்:- முஸ்லிம் காங்கிரஸானது கல்குடா சமூகத்தினை பச்சைபச்சையாக ஏமாற்றிய தன் காரணமாக இன்னும் ரவூப் ஹக்கீமை நம்பி சமூகத்தை பலிக்கடாவாக்க முடியாது என உணர்ந்து கொண்ட கல்குடா பிரதேச சமூகமோ பள்ளிவாயல் நிருவாகமோ, அமைப்போ அல்லது கழகங்களோ கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என எவரையும் ரவூப் ஹக்கிமிடம் அழைத்துச் செல்ல வில்லை. இதன் காரணமாகவே கல்குடாவில் உள்ள முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்களிடம் கலந்தாலோசிக்காமல் தனது பேச்சினை கேட்கக்கூடியவரும் கல்குடா சமூகத்திற்கு எவ்வித சம்பந்தமுமில்லாமல் கொழும்பில் வேலைபார்த்துக் கொண்டிருந்த றியாலினை ரவூப் ஹக்கீம் தன்னிச்சையாக நியமித்துள்ளார்.

**கேள்வி:- உங்களுடைய வெற்றிக்கு பிற்பாடு கல்குடா மக்களிடம் இருந்து வெளிப்படுக்கின்ற முக்கிய பிரச்சினையான வாழைச்சேனை பிரதேசத்திற்கான தனியான பிரதேச சபை சம்பந்தமாக என்ன முடிவினை எடுக்க தீர்மானித்துள்ளீர்கள்?**

பதில்:- இது சம்பந்தமாக ஒரே ஒரு அரசியல் கட்சிசார்பாக பேசுகின்ற அரசியல் வாதி நான் ஒருவனே. வாழைச்சேனைக்கு தனியான பிரதேச சபை அமைக்கப்பட வேண்டும் என்பதோடு பிரதேச செயலகத்திற்கு சகலவசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு தமிழ் உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்திலும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே இருக்கின்றோம். அது சம்பந்தமாக இம்முறை நான் வெளியிட்டுள்ள இருபதுக்கு இருபது எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை முதன்மைப்படுத்தியுள்ளேன். மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களும் 10பிரதேச சபைகளும் இருக்கின்றன. மிகுதித் தேவையாக இருக்கின்ற பிரதேச சபைகள் உடனடியாக அமைய வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு அனைத்து தரப்பினருடனும் சுமுகமாக பேசி அதனை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க தீர்மானித்துள்ளேன்.

**கேள்வி:- கல்குடா பிரதேசத்தில் முக்கிய பிரச்சினையாக இருக்கின்ற தூய குடிநீர் பிரச்சினைக்கு எதிர்காலத்தில் நீங்கள் கொடுக்கப்போகும் தீர்வு என்ன?**

பதில்:- நான் அனர்த்த சேவைகள் அமைச்சராக இருந்த காலத்தில் அமைச்சர் அதாவுல்லாவுடன் சேர்ந்து மட்டக்களப்பிலே முதன்முதலாக குடிநீர் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தேன். அதனோடு சேர்த்து கல்குடாவுக்கான குடிநீர் பெறுவதற்கான திட்டவரைபினையும் சமர்ப்பித்திருந்தேன். கடந்த பொதுத்தேர்தலிலும் அதனை நிறைவேற்றிகொள்வதற்காக கல்குடா மக்களிடம் மீண்டுமொரு ஆணையை கேடிருந்ததினை கல்குடா மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். ரவூப் ஹக்கீமினை போன்று பாசிக்குடாவிற்கு வருகின்ற நீர் வினியோகத் திட்டத்தினை கல்குடாவிற்கு மாற்றியமைக்கபோவதாக கூறி மக்களை ஏமாற்றும் வித்தையாக ஓட்டமாவடி பிரதான வீதியில் ஐம்பது மீற்றருக்கு பிளாஸ்டிக் குழாய்களை பதித்ததை போன்று என்னால் பூச்சாண்டி காட்டமுடியாது. பாரியளவில் திட்டமிட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் செயற்படுத்தும் திட்டமாக இருக்கின்ற திடத்தினை எனது இருபதுக்கு இருபது அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக எனது வெற்றிக்கு பிற்பாடு முன்னெடுப்பேன் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

> **முஸ்லிம் காங்கிரஸானது கல்குடா சமூகத்தினை பச்சைபச்சையாக ஏமாற்றியதன் காரணமாக இன்னும் ரவூப் ஹக்கீமை நம்பி சமூகத்தை பலிக்கடா வாக்க முடியாது**

**கேள்வி:- உங்களுடைய கட்சியில் இருந்த ஹுனைஸ் பாருக்கின் வெளியேற்றத்திற்கு பின்னர் உங்களுடைய கட்சியின் தலைமையின் வெற்றியின் நிலைப்பாடு வன்னியில் எவ்வாறு இருக்கின்றது?**

பதில்:- கட்சியில் வருகின்றார்கள் போகின்றார்கள் எனபது இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து கட்சிகளிலும் இருக்கின்ற பொதுவான நிகழ்வாகும். கட்சி என்பது குர்ஆனோ, மாக்கமோ, கிப்லாவோ கிடையாது. கட்சி என்பது என்னைப் பொறுத்த மட்டில் ஒரு இயக்கமாகும். வன்னியிலே ஹுனைஸ் பாருக் சென்றுவிட்டார் என்பதற்காக எங்களது தலைமைத்துவம் ஆட்டம் கண்டுவிடப் போவதில்லை. கடந்த தேர்தலிலே ஹுனைசுடன் சேர்த்து இரண்டு ஆசனங்களை எமது கட்சி பெற்றுகொண்டமையானது கட்சியின் தலைமைக்கு மக்களால் கொடுக்கப்பட்ட மரியாதையும் வன்னிமக்களின் அடிப்படைத் தேவைகளை கருத்தில் கொண்டு செயற்பட்டதும் தேசியத்தில் இருக்கின்ற ஒட்டு மொத்த முஸ்லிம்களினதும் தமிழ் மக்களினதும் உரிமைகளுக்காக குரல் கொடுத்தமையினால் தலைமைக்கு கிடைத்த வெற்றியாகும். ஆகவே ஹுனைஸ் பாருக்கின் வெளியேற்றம் எங்களுடைய கட்சிக்கோ தலைமைக்கொ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதனை வருக்கின்ற 18ம் திகதி நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

**கேள்வி:- உங்களுடைய அரசியல் வாழ்க்கையில் கல்குடா மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற இலட்சியம் உங்களால் முடியாமல் போயிருக்கும். ஆனால் இம்முறை தேர்தல் வெற்றிக்கு பிற்பாடு அதனை கல்குடா மக்களுக்கு நிச்சயம் செய்து கொடுப்பேன் என எதனை இலட்சியமாக கொண்டுள்ளீர்கள்?**

பதில்:- இந்த மாவட்டத்திலே கல்வி பீதியாக என்னிடம் ஒரு தூர நோக்கு இருக்கின்றது. மாவட்டத்தில் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி தமிழர்களாக இருந்தாலும் சரி மாவட்டமானது கல்வியில் முன்னிலையில் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருபதோடு, நீங்கள் கூரியதைப் போன்று இன்னும் எமக்கு கைகூடாமல் போயுள்ள வாழைச்சேனைக்கான தனியான பிரதேச சபையினை பெற்றுக்கொடுப்பதே எனது வெற்றிக்கு பிற்பாடு உள்ள இலட்சியமாகும்.

**கேள்வி:- தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அவர்களுடைய பிரதேசங்களில் நீங்கள் யானைச் சின்னத்திற்கு அளிக்கின்ற வாக்குகள் அனைத்தும் அமீர் அலியினை பாராளுமன்ற கதிரையில் உட்காரச் செய்யும் என பிரசாரம் செய்வதாக பரவலாக பேசப்படுவதனை எவ்வாறு நினைக்கின்றீர்கள்?**

பதில்:- அமீர் அலி நிச்சயமாக இம்முறை பாரளுமன்ற தேர்தலில் வெற்றிபெறுவார் என்பது தமிழ் தேசியக் கூடமைப்பினருக்கே தெரிந்து விட்டது. அதனால் அவ்வறான பிரசாரத்தினை மேற்கொள்கின்றனர். அவர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு அரசியல் ஆயுதம் தமிழ் வாக்காளர்களை முறுக்கேற்றி இனத்துவேசத்தினை ஏற்படுத்தி தமிழ் முஸ்லிம் உணர்வுகளை சீர்குளைத்து அதன் மூலம் குளிர்காய்கின்ற அரசியலினை கடந்தகாலத்தில் திறம்படச் செய்துவந்தார்கள். ஆனால் இத்தேர்தல் தமிழ் மக்கள் அவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்பதனை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**கேள்வி:- அரசியலில் உங்களுடன் எப்பொழுதும் முரண்பட்டுகொள்கின்ற முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நவமணியுடனான நேர்காணலின் பொழுது என்னையும் அமீர் அலியையும் மாவட்டத்தில் ஹக்கீமினால் தோற்கடிக்க முடியாது என்றும் நானும் வெல்வேன் அமீர் அலியும் வெல்வார் என உங்களுக்கு ஆதரவாக தெரிவித்துள்ள கருத்தினை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- நிச்சயமாக ரவூப் ஹக்கீமுக்கு முன்பாகவே ஹிஸ்புல்லாஹ் அரசியலுக்குள் வந்தவர் என்றவகையில் தெளிவாக சொல்லியிருக்கின்றார்.

**கேள்வி:- முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் அதன் ஆதரவாளர்களும் உங்களுக்கு மறைமுகமான முறையில் ஆதரவளித்து வருவதாக பரவலாக பிரதேசத்தில் பேசப்படுவது சம்பந்தமாக உங்களுடைய கருத்து என்ன?**

பதில்:- பசீர் சேகுதாவூத் என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. அவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் தவிசாளர் என்ற பீதியிலும் அவருக்கு தேசியப் பட்டியல் வழங்கப்படிருக்க வேண்டும் என்ற விடயத்தினை நாங்கள் பேசிக்கொள்வோமே தவிர அவரும் அவருடைய ஆதரவாளர்களும் எங்களுக்கு அதரவளிக்க வேண்டும் என்பது சம்பந்தமாக நாங்கள் பேசிக்கொள்வதுமில்லை. எங்களுக்கு அவர்கள் ஆதரவளிக்கவுமில்லை. ஆனால் ஏறாவூரினை பொறுத்தமட்டில் கணிசமான முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் எங்களுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றனர். பசீர் சேகுதாவூத் இன்னும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளராகவே செயற்பட்டு வருகின்றார் என நினைக்கின்றேன்.

**கேள்வி:- கடைசியாக நீங்கள் வருகின்ற பாராளுமன்ற தேர்தல் சம்பந்தமாக கல்குடாவில் உள்ள உங்களுடைய ஆதரவாளர்களுக்கு மாவட்டத்தில் இருக்கும் வாக்காளர்களுக்கும் எதனைக் கூற விருபுக்கின்றீர்கள்?**

பதில்:- எதிர்காலத்தில் ஐக்கியத்தையும் அபிவிருத்தியையும் நோக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தினை தமிழ் பேசுகின்ற மக்கள் என்ற விடயத்தில் ஒற்றுமைப்படுத்தி செயற்படுத்துகின்ற விடயத்தில் தமிழ் உறவுகளும் முஸ்லிம் உறவுகளும் எந்த பேதமும் இல்லாமல் ஒன்று சேர்ந்து மஹிந்த ராஜபக்ஷ துவம்சம் செய்கின்ற அரசியலினை மீண்டும் கொண்டு வருவதற்கு இடமளிக்காமல் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியினை பலப்படுத்துவதற்கு யானைச்சின்னத்திற்கு வாக்களிப்பதோடு, எதிர்காலத்தில் தொகுதிவாரி தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதனால் கல்குடா மக்கள் அதனுடனான எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக இம்முறை என்னை பாராளுமன்றம் அனுப்புவதற்கு ஒத்துளைக்குமாறு பணிவாக வேண்டிக்கொள்கின்றேன்.

★★★★









# சவால்களை சந்திக்கும் திகாமடுல்ல தேர்தல்களம்

■ உமர் அலி

*(வெள்ளிக்கிழமைத் தொடர்ச்சி...)*

ஒவ்வொரு பிரதேசத்திலும் இருந்து சிறுகச்சிறுக சேர்த்து வளர்க்கப்பட்டதே ஒழிய, வெறுமனே ஒரு ஊரில் மட்டும் இருந்து குவிந்ததல்ல. இந்த வாக்கு வங்கியை உயர்த்துவதற்கு எவ்வளவோ தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றது. அஷ்ரபின் காலத்திற்கு முன்னர் சாய்ந்தமருதில் இருந்த நிலை மீண்டும் இப்பொழுது உருவாகியிருக்கிறது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபையில் முதலைமச்சர், அமைச்சர் போன்ற பதவிகள் தனக்கு கிடைக்கும் என்ற கனவில் மிதந்த ஜெமீலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவ்வாறு அலட்டிக்கொள்ளாததன் காரணமாகவே சாய்ந்தமருதில் ஒரு ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஹக்கீமுக்கு பொம்மை கட்டி எரிக்க முற்பட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஹக்கீம் அந்த சமிக்ஞையை சரியாக பொருள்கோடல் செய்யவில்லை என்பதே எனது கருத்தாகும். அவ்வாறு பொருட்கோடல் செய்திருந்தால் மொத்தமாக சாய்ந்தமருது இழக்கப்படுவதில் இருந்து தவிர்ந்துகொள்ள ஏதாவது உருப்படியான நடவடிக்கை எடுத்திருப்பார். இறுதி நேரத்தில்கூட சிராஸ் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில் இணைய இருந்ததாகவும் மாகாண சபைக்கான வேட்புமனுவும், முதலாவது சாய்ந்தமருது பிரதேச சபைக்கான தவிசாளர் பதவியையும் தனக்கு தருவேன் என எழுத்தில் தருமாறு நிபந்தனை விதித்ததாகவும், அதை ஹக்கீம் மறுத்ததாகவும் கதைகள் அடிபட்டன. இதில் எந்தளவு உண்மை உள்ளது என்பது சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே அறிந்த விடயமாகும்.

பொத்துவிலைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாகவும், தேர்தல் காலங்களில் எல்லா ஊரின் வேட்பாளர்களும் பொத்துவிலிலே தஞ்சமடைந்து, கூடாரமிட்டுக் கொண்டு பொருட்களையும், பணத்தையும், வாக்குறுதிகளையும் அள்ளிவீசி மக்களைக்கவர்ந்து அவர்களது வாக்குகளை பெற்றுவந்த ஒரு இடமாகவே கருதப்பட்டது.

தொடர்ச்சியாக சகல அரசியல்வாதிகளாலும் புறக்கணிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட ஊரில் பல குட்டித் தலைமைகள் இருந்தாலும் இம்முறை தனக்கென ஒரு இரண்டு மூவாயிரமேனும் சொந்த வாக்குவங்கியை கொண்டிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீதை மயில் கட்சி களமிறக்கியுள்ளது.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் மேலுள்ள மனக்கசப்பினாலும் அதாவுல்லா அணியிலுள்ள வெறுப்பினாலும் இதுதான் தகுந்தவழி என்று மக்கள் தமது ஊரைச்சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் போட்டியிடும் மயில் சின்னத்துக்கு வாக்களிக்க கணிசமானளவு மக்கள் தீர்மானித்துள்ளனர். இங்கும் ஐக்கிய தேசியக்கட்சி எதிர்பார்த்திருந்த கணிசமான வாக்குகள் மாற்று அணிக்குப் போவதற்கு மிகவும் அதிகளவான சாதகம் உண்டு.

சம்மாந்துறையைப் பொறுத்தவரை சென்ற முறை நடைபெற்ற தேர்தலில்கூட பெருமலவிலான வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்கு அளிக்கப்படவில்லை. ஆனால், இம்முறை அதனைவிட மோசமான நிலைக்கு சாம்மாந்துறை தள்ளப்பட்டிருக்கின்றது தெளிவாக புலப்படுகின்றது. மயில் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவராக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் இஸ்மாயில் நிறுத்தப்பட்டிருப்பதும், சம்மாந்துறை மு.கா. ஆதரவாளர்களில் அனேகமானோர் மாகாண அமைச்சர் மன்சூருடன் முரண்பாடு உடையவர்களாக இருப்பது இதற்கொரு காரணமாகும்.

அத்தோடு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நௌசாத்தின் அணியினரில் முக்கால்வாசிப் பேர் உபவேந்தரையே ஆதரிப்போம் என கூறித்திரிகின்றனர். இதுவரை காலமும் அதாவுல்லாவின் அணியில் இருந்து கிட்டத்தட்ட 6 ஆயிரம் வாக்குகளை பிரித்த அமீர் டீ.ஏ. ஆதரவாளர்களும் இம்முறை உபவேந்தரையே ஆதரிக்கின்றனர். மாஹிரின் ஆதரவாளர்களில் பெரும்பாலானோர் மன்சூரை ஆதரிக்க மாட்டோம் என்று கூறுகின்றனர்.

அதேவேளை அடிப்படை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மட்டும் மூன்று முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கும் புள்ளடியிட நினைத்திருக்கின்றார்கள். எது எப்படி இருப்பினும் சம்மாந்துறையைப் பொறுத்தவரை அங்கு அளிக்கப்படவுள்ள வாக்குகளில் 75% வாக்குகள் உபவேந்தருக்கு அளிக்கப்பட வாய்ப்பிருக்கின்றது. இதுவே மயில் கட்சியின் பிரதானமான வாக்குவங்கியுள்ள ஊராக இன்று கணிக்கப்படுகின்றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் ஒரு ஆசனத்தைப் பெறுமாக இருப்பின் அது சம்மாந்துறையைச் சேர்ந்தவருக்கே உறுதியாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முன்னாள் உபவேந்தர் இஸ்மாயிலுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் தொடுத்துள்ள ரீட் மனு அவருக்கு கிடைக்கும் வாக்குகளில் சரிவினை ஏற்படுத்தக்கூடும்.

கல்முனையில் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு கணிசமானளவு இருக்க வாய்ப்புள்ளது. இருந்தாலும் வழமைபோல முஸ்லிம் காங்கிரஸ் அணிக்கு சிம்மசொப்பனமாக இருந்துவருகின்ற பெஸ்டர் றியாஸ் இம்முறையும் முஸ்லிம் காங்கிரஸ் - ஐக்கிய தேசியக்கட்சி அணியினை எதிர்த்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அணியுடன் கை கோர்த்திருப்பதால் வழமையாக எதிர்த்து அளிக்கப்படும் வாக்குகள் அப்படியே மொத்தமாக மயில் சின்னத்துக்கு அளிக்கப்படலாம்.

அதேவேளை, ஹரீஸ், நிசாம் காரியப்பர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கையாலாகாத தனத்தினையும், சாணக்கியமில்லாத நடவடிக்கைகளையும் வெறுத்து சில அடிப்படை மு.கா. ஆதரவாளர்கள் மாற்று அணியுடன் சேர்ந்துள்ளனர். ஆனால், இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் அதிருப்தியடைந்திருந்தாலும் எவரும் நீலக்கட்சிக்கு ஆதரவு வழங்குவதாக இதுவரை அறியக்கிடைக்கவில்லை.

அந்தவகையில் பார்க்கும்போது இதுவரை காலமும் நீலக்கட்சியை சந்தைப்படுத்திய அதாவுல்லா தமக்கென இருந்த வாக்குகளில் கிட்டத்தட்ட 90% வாக்குகளை இழந்துள்ளனர் என்று கூறினால் அதில் பிழையில்லை.

நிந்தவூரைப் பொறுத்தவரை காலகாலமாக 80, 90 சதவீதமான வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்கே அளிக்கப்படுவது வழக்கம். இம்முறையும் அவ்வாறுதான் இருக்கும். வழமையாக முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக அளிக்கப்பட்டுவரும் வாக்குகளில் பெரும்பான்மையான வாக்குகள் (கிட்டத்தட்ட 1700) ஆரிப் சம்சுதீனின் முஸ்லிம் காங்கிரஸ் வருகையினால் ஐக்கிய தேசியக்கட்சிக்கே அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுதவிர நிந்தவூர் முஸ்லிம் லீக் நிஷாத் பதியுதீனின் கட்சியினை ஆதரிப்பதால் 400 தொடக்கம் 500 வரையான வாக்குகள் நிஷாத் அணியினருக்கு நிந்தவூரிலிருந்து கிடைக்க வாய்ப்புண்டு.

சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல முதலாவது போட்டியிலேயே மயில் சின்னம் ஒவ்வொரு ஊரிலும் சிறுகச்சிறுக சேகரித்துக் கொண்டு மூன்று பெரிய ஊர்களிலும் மொத்தமாக பிடித்து வருவதால் ஆசனம் ஒன்றை எடுப்பதற்கு அதிக வாய்ப்புண்டு.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஒரு அணி என்பது மக்கள் மத்தியில் புதைந்துள்ள ஒரு எண்ணமாகும். அதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் எந்தவொரு முஸ்லிம் வேட்பாளருக்கும் பெருமளவான முஸ்லிம் வாக்குகள் கிடைக்காது.

ஆனால் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா அவரது ஊருக்கு செய்த அபரிதமான சேவைக்கு பகரமாக அவருக்கு வாக்களிப்பதன்மூலம் நன்றிக்கடனை அடைக்க வாய்ப்புண்டு. அவ்வாறு நன்றி செலுத்துவதற்கு அவருக்கு வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மட்டுமன்றி அக்கரைப்பற்று ஊர்பிரகடனம் எனும் நிகழ்வினை ஒழுங்குசெய்து ஊரில் பிறந்த அனைவரும் அதாவுல்லாவுக்கே வாக்களிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் அதாவுல்லா அக்கரைப்பற்றில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை வெற்றிலைக்கு பெற்றுக்கொடுப்பார்.

எது எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை சகல வாக்காளர்களும் கவனத்திற்கொள்ள வேண்டும். சொந்த கோபதாபங்களையோ, ஊர் வாதங்களையோ, பிரதேசவாதங்களையோ முஸ்லிம்கள் பின்பற்றக்கூடாது.

*(முற்றும்)*


தேசத்தை உயிரூட்டுவோம்
புதிதாகவே ஆரம்பிப்போம்

රටට පණ දෙමු
අලුතෙන්ම පටන් ගමු

LET'S POWER THE NATION
LET'S START AFRESH

එක්සත් ජනතා නිදහස් සන්ධානය
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி
UNITED PEOPLE'S FREEDOM ALLIANCE

அரச ஊழியர்களின் எதிர்காலத்திற்கு உத்தரவாதம்

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அரசின் கீழ் அரச ஊழியர்களுக்கு கிட்டும் அனுகூலங்களின் விளக்கம்

| | தற்போதை அரசாங்கத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியம் மற்றும் கொடுப்பனவு | எதிர்காலத்தில் சுதந்திர கூட்டணி அரசாங்கத்தின் கீழ் கிட்டும் ஊதியம்/வாழ்க்கைப்படி / கொடுப்பனவு/அனர்த்த கடன்/5 ஆண்டுகால கடனாக | அதிகரிப்பு |
|---|---|---|---|
| உதாரணம்: கனிஷ்ட சேவையிலுள்ளவர்களின் அடிப்படை ஆரம்ப ஊதியம் | ரூ. 11,730.00 | ரூ. 25,000.00 | ரூ. 13,270.00 |
| மேலதிக கொடுப்பனவு | 5% கொடுப்பனவு 750.00<br>15% கொடுப்பனவு 1,760.00<br>2014 நவ. கொடுப்பனவு 3,000.00<br>2015 ஜன. கொடுப்பனவு 5,000.00<br>2015 ஜுன் கொடுப்பனவு 2,000.00 | இவ்வனைத்து கொடுப்பனவுகளும் புதிய அடிப்படை சம்பளத்தில் இணைக்கப்படும் | இவ்வனைத்து கொடுப்பனவுகளும் புதிய அடிப்படை சம்பளத்தில் இணைக்கப்படும் |
| வாழ்க்கை செலவின கொடுப்பனவு | ரூ. 7,800.00 | ரூ. 10,000.00 | ரூ. 2,200.00 |
| கிடைக்கும் மொத்தச் சம்பளம் | ரூ. 24,240.00 | ரூ. 35,000.00 | ரூ. 10,760.00 |
| 40 மணிநேரம் மேலதிக நேரச் சேவையில் ஈடுபடும் போது | $\frac{(11,730x40)}{20x8}$ = 2,932.00 | $\frac{25,000x40)}{20x8}$ = 6,250.00 | ரூ. 3,318.00 |
| முழுச்சம்பளம் மேலதிக நேர கொடுப்பனவுடன் | ரூ. 27,172.00 | ரூ. 41,250.00 | ரூ. 14,078.00 |
| விடுமுறை தின ஊதியம் | நிறைவேற்றதிகார ஆரம்ப நிலை அதிகாரிகள் பெறும் விடுமுறை தின ஊதியம் (22,935x1/20)=1,146.75 (தற்போதைய அடிப்படை சம்பளத்தின் பிரகாரம்) | சுதந்திர கூட்டணி அரசின் கீழ் புதிய 1:4:25 சம்பள விகிதத்திற்கு அமைய கிட்டும் விடுமுறை ஊதிய அதிகரிப்பு | புதிய அடிப்படை சம்பளத்திற்கு விடுமுறை ஊதிய அதிகரிப்பு |
| அனர்த்த கடன் (10 மாதங்கள்) | குறைந்த அடிப்படை சம்பளத்தின் பிரகாரம் (11,730x10)=117,300.00 | புதிய அடிப்படை சம்பளத்தின் பிரகாரம் (25,000x10) = 250,000.00 | ரூ. 132,700.00 |
| 5 வருட சம்பளக் கடன் | குறைந்த அடிப்படை சம்பளத்தின் பிரகாரம் (11,730x60) = 703,800.00 | புதிய அடிப்படை சம்பளத்தின் பிரகாரம் (25,000x60) = 1,500,000.00 | ரூ. 796,200.00 |

**அரச சேவையின் புதிய சம்பள முறைமைக்கு அமைய உருவாகும் அதிகரிப்பிற்கு அமைவாக ஓய்வூதிய கொடுப்பனவுகளில் காணப்படும் சீரின்மைகள் நிவர்த்தி**

அரச ஊழியர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் ரூபா 25,000 வரை அதிகரிப்போம். அத்தோடு 1:4:25 விகிதத்திற்கு அனைத்து அரச துறைகளிலும் உள்ள தரங்களில் சம்பள மறுசீரமைப்பு செய்யப்படும். தற்போதைய ஆட்சியில் 2006 வரை சீராக்கப்பட்டுள்ள ஓய்வூதியம், எதிர்வரும் சுதந்திர கூட்டணியின் அரசில் அதன் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளவாறு 2015 புதிய ஊதிய திட்டத்தில் இணைத்திடும். அதற்கமைய 2006 இற்கு முன்னர் மற்றும் அதற்கு பின்னர் ஓய்வூபெற்ற சகல ஓய்வூதிதாரர்களினதும் ஓய்வூதியங்களில் காணப்படும் சீரின்மை விலக்கப்படும்.

மேற்கூறிய கணக்கீடு உத்தேச பெறுமதிகள் ஆகும்.

# கிழக்கு செய்திகள்

# சட்டப்படி பதவியை இராஜினாமா செய்தே பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்!

## கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில்



(ஏ.எல்.எம்.சலீம்)

சட்டப்படி பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதோடு ஒருபடி மேலே சென்று 36 மாத சம்பளத்துடனான விடுமுறையைக் கூட இழந்து இராஜினாமாச் செய்துள்ளேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் முன்னாள் உபவேந்தர் கலாநிதி எம்.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

தனக்கு எதிராக ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக விளக்கமளிப்பதற்கு நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வேட்பாளர் இஸ்மாயில் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு தகுதியற்றவர் என உத்தரவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட்மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

வேட்பாளர் கலாநிதி இஸ்மாயில் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அ.இ.ம.கா. பக்கம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள் அலை அலையாகத் திரண்ட வண்ணமிருப்பதும், என்போன்றவர்கள் இக்கட்சியில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளமையும் மு.காவுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமது கட்சியின் இருப்பு இந்த மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் கேள்விக்குறியாகியுள்ளமையும் தமக்கு ஏற்படப்போகும் தோல்விப் பயமும் அவர்களுக்கு தேர்தல் கால காய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த காய்ச்சல் காரணமாகவே எனக்கு எதிரான ரிட்மனு தாக்கல் மட்டுமன்றி எமது பிரசார மேடைகள் மீதான கல்வீச்சு தாக்குதல் போன்ற அவர்களது கீழ்த்தர அரசியல் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

எமது கட்சியின் சின்னமான மயிலை, தமிழ் மக்களது முருகனின் வாகனமெனக் கூறுமளவிற்கு அரசியல் கீழ்த்தரத்துடன் முஸ்லிம் காங்கிரஸினர் தடுமாறிப்போயுள்ளனர்.

இப் பொதுத்தேர்தலுடன் மக்களால் விரட்டியடிக்கப்படவுள்ள அவர்கள் விரக்தியின் விளிம்பில் நின்றுகொண்டு மக்கள் மனங்களைக் குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர். இந்தக் குழப்ப முயற்சியில் ஒன்றுதான் எனக்கெதிரான ரிட்மனு தாக்கலாகும்.

நான் சட்டப்படி எனது பல்கலைக்கழகப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதோடு மட்டுமன்றி ஒருபடி மேலேசென்று 36 மாதங்கள் சம்பளத்துடனான (வரப்பிரசாத) விடுமுறையைக்கூட இழந்து இராஜினாமாச் செய்துள்ளேன். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பார்வையில் இவர்கள் கூறிய விடயம் பெரிய விடயமல்ல.

இம் முறை யாழ். பல்கலைக்கழக துறைத் தலைவர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுகின்றார். ருஹுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் போட்டியிடுகின்றார். பேராசிரியர் விஜித நாணயக்கார சுதந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். எனவே, இந்த விடயத்தில் சவால் விட்டவர்கள் அவர்களுக்கு நான்விட்ட சவாலையும் ஏற்க முன்வரவேண்டும்.

சிறுபான்மை முஸ்லிம் கட்சிகளுக்குள் அ.இ.ம.கா. தலைமைத்துவம் சொன்னதைச் செய்யும்: நம் மக்களின் உரிமைகளைப் பற்றிப்பேசும், இவற்றுக்கும் அப்பால் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, அபிவிருத்தி பற்றியும் சிந்திக்கும் தலைமைத்துவமாகும். இந்த அடிப்படையில் எனக்குள்ள அதீத நம்பிக்கை காரணமாகவே இத்தலைமைத்துவத்துடன் இணைந்துள்ளேன். அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் தலைமைத்துவத்தினூடாக பல்வேறுபட்ட நல்ல விடயங்களை முஸ்லிம் சமூகத்திற்குச் செய்யமுடியும். இந்த அடிப்படையில் நான் இணைந்தபின் சில அரசியல்வாதிகளுக்கு காய்ச்சல் பிடித்துள்ளது.

நமது பகுதியில் செல்வாக்கு செலுத்திய சில கட்சியின் வெள்ளை கடதாசியில் ஒப்பமிடுவதுபோல் வாக்குறுதிகளை அளித்து கடந்த காலங்களில் எம் மக்களின் வாக்குகளைச் சூறையாடிச் சென்றனர். ஆனால் நான் புதிய உலகின் நுழைவாயில் எனும் அடிப்படையில் 16விடயங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனமொன்றை மக்கள் மத்தியில் வெளியிட்டுள்ளேன். நம் பிரதேசங்களில் என்னால் அடையாளம் காணப்பட்ட முக்கிய விடயங்களைக் கொண்ட இந்த ஆவணத்திற்கு அமைவாக, மக்கள் ஆணை கிடைத்தாலும் முடியுமான அனைத்து சேவைகளையும் செய்யவுள்ளேன்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவற்றை என்னால் செய்யமுடியாவிட்டால் நானே அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்வேன் - என்றார்.

# தாபரிப்புப் பணம் செலுத்தாதவர் கைது

(கந்தளாய் நிருபர் எப்.முபாரக்)

தனது பிள்ளைகள் இருவருக்கும் தாபரிப்பு பணம் செலுத்தாது தலைமறைவாக இருந்து வந்த ஒருவரை சனிக்கிழமை கைதுசெய்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு நொச்சிமுனை பகுதியை சேர்ந்த நபரொருவர் திருமணம் முடித்து மனைவியைப் பிரிந்து வாழ்ந்துவந்த நிலையில் தனது இரு பிள்ளைகளுக்கும் தாபரிப்புப் பணமாக மாதாந்தம் 7500 ரூபா செலுத்தி வந்துள்ளார்.

எனினும், சுமார் பத்து மாதங்களாக தாபரிப்பு பணம் செலுத்தாது வேறொரு பெண்ணை திருமணம் முடித்து வாழ்ந்துவந்த நிலையில், சந்தேகநபரின் முதல் மனைவி கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில்அவரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# மக்களுக்கு உண்மையாக சேவையாற்றுவோரை தடுத்துநிறுத்தும் முயற்சியில் முஸ்லிம் கட்சிகள்

## முஸ்லிம் லிபரல் கட்சி வேட்பாளர் எம். இஸ்மாயில் ஆதங்கம்



(கல்முனை விசேட நிருபர்)

மக்களுக்கு சேவையாற்ற வருகின்றவர்களை தடுத்துநிறுத்தும் செயற்பாடுகளையே முஸ்லிம் தலைமைகள் இன்று அரங்கேற்றுகின்றன. இதனால் பல்வேறு கழுத்தறுப்புக்கள், துரோகங்களுக்கு மத்தியில்தான் சுயேச்சையாக பொதுத்தேர்தலில் களமிறங்கியுள்ளோம் என முஸ்லிம் லிபரல் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் பொதுத் தேர்தல் வேட்பாளருமான எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

சாய்ந்தமருது கட்சி அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் கட்சிகளின் பின்னால் செல்வதைவிட சிறந்த வேட்பாளர்களின் பின்னால் சென்று உரிமைகளை பெறவேண்டும். அதுவே எமது கட்சியின் பிரதான நோக்கமாகும். கடந்த 30 ஆண்டுகளாக மக்கள் கட்சிகளின் பின்னால் சென்று கடைசியில் அக்கட்சிகளையே வெறுத்து துரத்தியடிக்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றார்கள். இந்நிலைக்கு காரணம் கட்சி மோகமாகும். அவர்கள் திறமையானவர்களை தெரிவு செய்திருந்தால் இன்று மக்கள் நடுத்தெருவில் நின்றிருக்க வேண்டியதில்லை. அதனால்தான் சுயநலம் பாராது மக்களுக்கு சேவைசெய்து கொண்டிருப்பவர்களை, தலைமைத்துவம் என்ற மாயைக்குள் சிக்கி ஆடாதவர்களை தெரிவுசெய்யுமாறு வேண்டுகிறோம்.

எமது நோக்கம் எதிர்கால சொத்துக்களான இளைஞர்களை வழிநடத்துகின்ற ஒரு தலைமைத்துவம் இலங்கையிலே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற அம்பாறை மாவட்டத்தில் உருவாக வேண்டும் என்பதாகும்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் மறைவுக்குப் பின் இன்றுள்ள தலைமைத்துவம் தூரநோக்கற்ற நிலையில் செயற்படுகின்றது. இவர்களுக்கு இந்த கட்சித் தலைமைப் பதவி மக்களால் விரும்பி கொடுக்கப்பட்டதல்ல. மாறாக சில முனாபிக் தனத்தினால் தட்டிப்பறித்ததே தலைமைப் பதவியாகும். அம்பாறை மாவட்டத்தில்தான் முஸ்லிம்களை ஆளுகின்ற தலைமைத்துவம் இருக்க வேண்டும். இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் ஒன்றாக இருக்கவேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால் மலையக தமிழ் மக்களுக்கு ஒரு தலைமைத்துவம், யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு தலைமைத்துவம் என்று பரவலாக காணப்படுகின்றது. இதனால் இலகுவாக அவ்வப் பிரதேச மக்களுடைய தேவைகளை அறிந்து தீர்வுகண்டு வருகிறார்கள். ஆனால் எமது முஸ்லிம் கட்சிகள் ஒரு தலைமைத்துவத்தினாலும் முனாபிக்கு தனமாக செயற்படுபவர்களினாலும் புடை சூழப்பட்டு சின்னாபின்னப்பட்டு இருக்கின்றது. அதனால்தான் தென் மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு தலைமைத்துவம் உருவாகியிருந்தால் பேருவளை போன்ற இடங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு அவர்களால் உடன் குரல் கொடுத்து தீர்வு கண்டிருக்கமுடியும். அதுபோன்றுதான் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட முஸ்லிம்களின் திட்டமிட்ட வெளியேற்றத்தின்போது அங்கு ஒரு தலைமை இருந்திருந்தால் அவர்களுக்கு ஒரு நியாயம் கிடைத்திருக்கும்.

இதனை இல்லாமலாக்கவே எமது கட்சி பல்தேசிய தலைமைத்துவம் முஸ்லிம்களுக்கு முக்கியமானது என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. தூர இடத்திலிருக்கும் தலைமைத்துவத்தால் இன்று சுனாமி பாதிப்புக்குள்ளான அம்பாறை மக்களுக்கான தேவையினை பூரணமாக செய்துகொடுக்கப்படவில்லை. இன்றும் தேவையுள்ளவர்களாகவே அவர்கள் இருக்கின்றார்கள். அதுபோல் அம்பாறை கரையோர மக்களுக்கு எதிர்காலத்தில் வீட்டுப் பிரச்சினை வரக்கூடும். இதனை தீர்ப்பதற்காக வெளிநாட்டு உதவியுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் பெற்று நாம் 1500 வீட்டுத்திட்டமொன்றை செய்துகொடுக்க இருக்கின்றோம். அதுபோல படித்த இளைஞர் யுவதிகளுக்கும் தொழில் வழங்கும் முகமாக பாரிய தொழிற்சாலைகளை நிறுவ இருக்கின்றோம்.

எனவே, எமது மக்களின் விடியலுக்காக சிறப்பாக செயற்படும் முஸ்லிம் லிபரல் கட்சியின் சார்பாக நாம் கோரும் அதிகாரத்தை வழங்கவேண்டும். மிகவிரைவில் அகில இலங்கை ரீதியாக எமது கட்சிப் பணிகள் விஸ்தரிக்கப்படும் - என்றார்.

# என்னுடைய இறுதிமூச்சு இருக்கும்வரை ஹக்கீமின் கரங்களை பலப்படுத்துவேன்

## மட்டு. முதன்மை வேட்பாளர் அலிஸாஹிர் மௌலானா



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

தனது இறுதிமூச்சு இருக்கும்வரை ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்திருந்து தலைவர் ஹக்கீமின் கரங்களைப் பலப்படுத்தப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீல.மு.கா. முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாலை ஏறாவூர் மௌலானா சதுக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு:

மு.கா. தலைவர் எந்தளவுக்கு என்னையும் எனது ஊரையும் நம்பி அவரது கட்சியில் என்னை இணைத்துக்கொண்டு இந்த மாவட்டத்தின் தலைமை வேட்பாளர் என்ற பொறுப்பைக் கொடுத்தாரோ அந்தப் பொறுப்பை மிகக் கண்ணியமாக நிறைவேற்றுவதற்கு நான் என்றென்றும் பாடுபடுவேன்.

அண்மைக்காலமாக, தேசியரீதியாக முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சவால்களையும், அரசியல் காய்நகர்த்தல்களையும் சூழ்ச்சிகளையும் முறியடிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் என்னை இணைத்துக் கொண்டிருப்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு எனது கடைசி மூச்சு இருக்கும் வரை தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு விசுவாசமாக இருப்பேன்.

கடந்த காலங்களில் இந்த நாட்டுக்காகவும், ஒட்டுமொத்த மக்களுக்காகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்காகவும் அநேக தியாகங்களை நான் செய்திருக்கின்றேன்.

அதேபாணியில் எனது பணி இனியும் தொடரும் என்பதை இவ்விடத்தில் நான் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகின்றேன். ஊழல், இனபேதம், பிரதேசவாத மற்ற முறையில் எனது சேவை தொடரும். பொதுத்தேர்தலின் பின்னர் அமையவிருக்கின்ற நல்லாட்சிக்கும், இன ஐக்கியத்திற்கும், இனப்பாகுபாடற்ற அத்தனை அபிவிருத்திக்கும் என்னாலான பங்களிப்புக்களைச் செய்வதற்கு நான் என்றும் சித்தமாக இருக்கின்றேன் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் முகா.தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், வேட்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான ஷிப்லி பாறுக் உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனை வைத்தியசாலைக்கு ரூ.13லட்.பெறுமதியான மருந்துவகைகள்

(பைஷல் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருந்துவகைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் தெரிவித்தார்.

சுதேச வைத்திய திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் ஆர்.ஸ்ரீதரிடம் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்கவே இந்த மருந்து வகைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இவ்வாறு கிடைக்கப்பெற்ற மருந்துவகைகளில் யூனானி மருந்துகள் போதுமானளவில் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த மாதங்களாக நிலவிவந்த மருந்து தட்டுப்பாட்டினால் வெளிநோயாளர்களின் வருகை குறைவடைந்து காணப்பட்டதாகவும் தற்போது வெளிநோயாளர்களின் வருகை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்த அவர் இந்த மருந்துகள் இவ்வருட இறுதி வரை போதும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சிராஸின் இறக்காமம் இணைப்பாளராக கே.எல். சமீம்

(ஏ.கே.ஏ.ரவூப்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், திகாமடுல்ல மாவட்ட வேட்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிபின் இறக்காமம் பிரதேச தேர்தல் இணைப்பாளராக இறக்காமத்தைச் சேர்ந்த அல்-ஹாபிழ் கே.எல்.சமீம் (பீ.ஏ.) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இறக்காமம் 6ஆம் பிரிவு கிராம அபிவருத்தி சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.



பொதுநிர்வாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி பற்றிய அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு பிரிவின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்டச் செயலகம் நடத்திய 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு கிண்ணியா மத்தியகல்லூரி அப்துல் மஜீது மண்டபத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் வளவளராக ஏ. எம்.நிஹ்மதுல்லா, ஏ.எஸ்.பௌசுர் ஆகியோர் விரிவுரையாற்றினர். தேசிய ஒருமைப்பாட்டு உதவியாளர் ஏ.எம்.இர்பான் அருகில் இருப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - ஜுனைட்.எம்.பஹத்)

# 100 நாள் திட்டத்தில் மலையகத்தில் நிர்மாணிக்கப்பட்டவீடுகள் 10ம் திகதி மக்களிடம் கையளிக்கப்படும் அமைச்சர் திகாம்பரம்



(க.கிஷாந்தன்)

100 நாள் வேலைத்திட்டத்தினூடாக மலையகப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் எதிர்வரும் 10ம் திகதி மக்களிடம் கையளிக்கப்படும் என தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நேற்று தலவாக்கலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

200 வருடங்கள் லயன்களில் வாழ்ந்து வந்த மலையக மக்கக்கு தனித்தனியான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காரணமாக இருந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டவாறு செயல்பட்டமை மலையக மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

அந்தவகையில் மலையக மக்களுக்கு குடியிருப்புகளை தனிவீடுகளாக அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையில் மும்மரமாக பிரதமர் செயல்பட்டார். அத்தோடு கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிரிசேன 100 நாள் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தார்.

அதில் மலையக மக்களுக்கு பல அபிவிருத்திகளை நாங்கள் மேற்கொண்டோம்.

அத்தோடு மலையகத்தில் கடந்த காலங்களில் எத்தனையோ அரசியல்வாதிகள் இருந்தபோதிலும் மலையக மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்திய அரசியல்வாதிகளுக்கு இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் நல்ல பாடத்தை புகட்டுவார்க்ள்.

எதிர்காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி மலையக மக்களுடைய தேவைகளை அறிந்து செயல்படும். அத்தோடு கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவா அல்லது மைத்திரிபால சிரிசேனவா இந்த நாட்டின் ஜனாதிபதி என்று மக்கள் மத்தியில் தடுமாற்றங்கள் இருந்தபோதிலும் இறுதியாக மலையக மக்கள் தங்களுடைய வாக்குகளை அளித்து மைத்திரிபால சிரிசேனவை வெற்றிபெறச் செய்து அவரை இந்த நாட்டின் ஜனாதிபதியாக மாற்றினார்கள்.

அதேபோல் தான் இம்முறையும் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை வெற்றிபெற செய்வார்கள் என்பது உறுதியாகிவிட்டது - என்றார்.

# இலங்கைமீது தொழில் வீஸா முறைகேடு: இத்தாலி கறுப்புப் பட்டியல் அச்சுறுத்தல்

நாட்டின் தொழில் சந்தையில் இலங்கையை கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்போவதாக இத்தாலி அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இத்தாலியில் வேலைவாய்ப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட 480 இடங்கள் தனியார் துறையினருக்கு விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் 500 மில்லியன் ரூபாவரை திரட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொதுமுகாமையாளர் மங்கள ரந்தெனியவின் தகவல்படி, இத்தாலி அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக 594 தொழில் விசலாக்களை கடந்த வருடம் வழங்கியிருந்தது

எனினும், இதில் 114 க்கு மாத்திரமே உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வீஸாக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய வீஸாக்கள் யாருக்கு வழங்கப்பட்டன என்பது தொடர்பில் தகவல்கள் எவையும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

இந்த தொழில் வீஸாக்களின்கீழ் தொழில் பெறுவோருக்கு குறைந்தது இலங்கை நாணயப்படி ஒரு லட்சம் ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. இந்தநிலையில் 480 விசாக்கள் முன்னைய அரசாங்க அதிகாரிகளால் கறுப்புச்சந்தையில் பெருந்தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# ஆற்றில் குளிக்கச்சென்ற இரட்டைச் சகோதரிகள் நீரில்மூழ்கி உயிரிழப்பு: மத்துகமவில் பரிதாபம்

மத்துகம அகலவத்தை பிரதேசத்தில் ஆற்றில் குளிக்கச் சென்ற பெண்கள் இருவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளனர். சனிக்கிழமை பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்த இருவரும் இரட்டைச் சகோதரிகள் எனவும் 23 வயதுடையவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

உயிரிழந்த யுவதிகளின் சடலங்கள் வெத்தேவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன.

# இன்றைய இளைஞர்களை நாளைய தலைவர்களாக்குவோம்!

## இளைஞர் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்வில் ஜெமீல்






(எம்.வை.அமீர்)

இந்தப் பிராந்தியம் தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் மறைவையடுத்த பதினைந்து வருடங்களாக பாழடைந்து இருப்பதாகவும், நிலைமை இன்னும் படுமோசமாகிக் கொண்டு செல்வதாகவும் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்வார் என எதிர்பார்க்கப் படுபவரும் மாகாணசபை உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல், குறைந்தது இந்தமுறை தேர்தலிலாவது மக்கள் ஒரு பாரிய அரசியல் தலைமைக்கான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இன்றைய இளைஞர்களை நாளைய தலைவர்களக்குவோம் எனும் தொனிப்பொருளில் இளைஞர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கிவரும் தேசிய வேலைத் திட்டத்தின் தொடரில் பயிற்சியைப் பூர்த்திசெய்த இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இளைஞர் தலைமைத்துவ பயிற்சிக்கான தேசிய இணைப்பாளர் றிஸ்லி சரீப் தலைமையில் சாய்ந்தமருது கொம்டெக் நிறுவனத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜெமீல், மாற்றத்துக்கான வாய்ப்பினை மக்கள் காங்கிரஸும் தலைவர் ரிஷாத் பதியுதீனும் தற்போது சாத்தியப்படுத்தியிருப்பதாகவும், தலைசிறந்த பத்து வேட்பாளர்கள் இப்பணியை நோக்கி பயணிப்பதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் இந்தப் பணியிலி தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளதாகவும், இளைஞர்கள் தன்னோடு இணைந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். நிகழ்வில் அ.இ.ம.கா. கல்முனைத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் சீ.எம்.ஹலீம் உட்பட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

# சிறுமிமீது துஷ்பிரயோகம் நபருக்கு 27 வருட சிறை

(எப்.முபாரக்)

கடந்த 2006 ஆம் ஆண்டு, முள்ளிப்பொத்தானையில் 11 வயது சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவருக்கு 27 வருட சிறைத் தண்டனை விதித்து திருகோணமலை மேல்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தம்பலாகமம், எட்டாம் கொலனி முள்ளிப்பொத்தானையை சேர்ந்த 11 வயதுச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றசாட்டில் 47 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு குற்றாம் நிருபிக்கப்பட்டதற்கு அமைவாக இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5லட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்துமாறும், அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில், ஐந்துவருட சிறை தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, 50 ஆயிரம் ரூபாவை செலுத்த தவறும்பட்சத்தில் இரண்டு வருட சிறைதண்டனையுமாக 27 வருட சிறைதண்டனை வித்தித்து திருகோணமலை, மேல்நீதிமன்ற நீதிபதி பா.சசிமகேந்திரன் உத்தரவிட்டார்.

# காவலுக்குச் சென்ற ஊர்காவல் படைச்சிப்பாய் இதுவரை திரும்பவில்லை

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அம்பாறை மாவட்டத்தின் தமன பொலிஸ் பிரிவில் 07 ஆம் கட்டை முவாங்கல்ல கரும்புத்தோட்டப் பகுதிக்கு கடந்த புதன்கிழமையன்று கடமைக்காகச் சென்ற ஊர்காவல் படைச்சிப்பாய் ஞாயிற்றுக்கிழமைவரை கண்டுபிடிக்கப்படவில்லை என தமன பொலிஸார் தெரிவித்தனர்.

ஹேரத் முதியான்ஸலாகே படகொல்ல கெதர புஞ்சிபண்டார (வயது - 57) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இதுபற்றி ஊர்காவற் படைவீரரின் மகன் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை (28.07.2015) காலை 8.30 மணியளவில் மேற்படி கரும்புத் தோட்டப் பகுதிக்கு காவல் கடமைக்காகச் சென்ற எமது தந்தை உரிய இடத்தில் காவல் கடமையில் இல்லை. இதையறிந்து பல இடங்களிலும் தேடிப்பார்த்தபோது அவர் பயணம் செய்த சைக்கிள் மாத்திரம் 07 ஆம் கட்டை, முவாங்கல்ல கரும்புத் தோட்டப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

# தலைநகரை உலுக்கி கார்த்திகா! கொலையின் பின்னணி என்ன?

கடந்த சில தினங்களுக்கு முன்னர் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் பெட்டியொன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் வட்டுக்கோட்டை சங்கரத்தை சங்கானை ஓடக்கரை கிராமத்தைச் சேர்ந்த 34 வயதான ரங்கன் கார்த்திக்காவினது என்று அடையாளம் காணப்பட்டது. கார்த்திகாவின் கணவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை யும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் கைதுசெய்துள்ளனர்.

கார்த்திகாவின் படுகொலைக்கு அடிப்படைக் காரணம் என்னவென்பதில் பொலிஸ் தரப்பு விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. குடும்ப பிரச்சினையே இறுதியில் இவ்வாறான நிலை அவருக்கு ஏற்படக் காரணம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி மத்துரட்டவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் உயிரிழந்த கார்த்திகாவின் சடலத்தை அடையாளம் காண்பிப்பதற்காக அவரது தாயார் கடந்த 30ம் திகதி இரவு வட்டுக்கோட்டையில் இருந்து கொழும்புக்கு வந்துள்ளார். எனவே, புறக்கோட்டை பொலிஸார் தொடர்ச்சியாக கார்த்திகாவின் தாயாரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் கார்த்திகா தொடர்பான பல்வேறு விடயங்கள் தெரியவந்திருக்கின்றன.

கார்த்திகா வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் அதே ஊரைச் சேர்ந்த ஒருவரை தனது விருப்பப்படி திருமணம் செய்துகொண்டதால் இவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இந்நிலையில், 2009ம் ஆண்டு கணவருடனும் குழந்தையுடனும் கொழும்புக்கு வந்து குடியேறியுள்ளார். அதன்பின் 2010ம் ஆண்டு கணவன் சவூதிக்கு செல்ல, இருவருக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட ஆரம்பித்துள்ளது.

கணவன் குடும்பத்தின்மீது அக்கறை கொள்ளாத நிலையிலேயே இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய தருணத்தில் தான் விடுதியில் கார்த்திகாவுடன் தங்கியிருந்ததாக கூறப்படும் சந்தேகநபருடன் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இருவரும் 3 வருடங்களாக கணவன் - மனைவி போலவே வாழ்ந்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே கடந்த 29ம் திகதி காலை கொழும்பு, புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையிலுள்ள தனியார் பஸ்நிலையத்தில் கைவிடப்பட்ட பயணப் பொதியொன்றிலிருந்து கார்த்திகா சடலமாக மீட்கப்பட்டார். மேலும் அவர்கள் இருவரும் செட்டியார் தெருவிலுள்ள விடுதி ஒன்றில் 22ம் திகதியிலிருந்து 28ம் திகதிவரை சுமார் 7 நாட்கள் தங்கியிருந்திருக்கின்றார்கள்.

இதுதொடர்பாக விடுதியின் முகாமையாளர் தெரிவிக்கையில்,

நான் இந்த விடுதியில் பல வருடங்களாக வேலைசெய்து வருகின்றேன். இங்கு 16 அறைகள் உள்ளன. வட பகுதியிலிருந்து வரும் பெரும்பாலானவர்கள் இங்குதான் வந்து தங்குவார்கள்.

குறித்த இருவரும் 22ம் திகதி இங்கு வந்தார்கள். வரும்போதே குறித்த பெண்ணின் சூட்கேஸுடன் சேர்ந்து மேலும் 3 பொதிகளும் இருந்தன. பார்ப்பதற்கு இருவரும் கணவன், மனைவியைப் போலவே இருந்தார்கள். அதுமட்டுமின்றி, அவர்களிடம் சமையல் பொருட்களும் இருந்தன. எனவே, நான் அவர்களிடம், ஏன்? இவ்வளவு பொருட்கள் என்று கேட்டேன் அதற்கு குறித்த நபர் நாங்கள் கொழும்பில் வாடகைக்கு வீடு ஒன்றை தேடுகின்றோம். ஒரு கிழமையில் கிடைத்துவிடும் என்று கூறினார். அதுவரையில் இங்கு தங்கியிருப்பதாக கூறினார்கள். நாங்களும் எவ்வித தயக்கமுமின்றி அனுமதி வழங்கினோம். மேலும் அறையின் சாவியை கொடுப்பதற்கு முன் தங்க வருபவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்குவது வழமை.

எனவே, அன்றும் அவர்களிடம் தேசிய அடையாள அட்டையைத் தருமாறு கேட்டபோது குறித்த பெண்ணின் தேசிய அடையாள அட்டையை மட்டுமே எங்களுக்கு கொடுத்தார்கள்.

எனினும், நான் அதை பெரிதாக கண்டுகொள்ளவில்லை. அவர்களுக்காக முதலாம் மாடியில் 5 ஆம் இலக்க அறையை ஒதுக்கிக் கொடுத்தேன். அதன்பின் பெரிதாக அவர்களிடம் எதுவும் நான் கதைக்கவில்லை.

முதலில் மூன்று நாட்களுக்குரிய வாடகைப் பணத்தை தந்தார்கள். மேலும் இருவரும் புதிதாக திருமணம் முடித்தவர்கள் போல் மிகவும் அந்நியோந்நியமாக பழகினார்கள்.

எனவே, எனக்கு அவர்கள் தொடர்பாக எந்தவித சந்தேகமும் ஏற்படவில்லை. அந்த பெண் பார்ப்பதற்கு நவ நாகரிக உடைகளுடனேயே எப்போதும் காட்சியளித்தார்.



இருவரும் மூன்றுவேளை உணவினை எடுப்பதற்காக வெளியில் சென்று வருவார்கள்.

சம்பவத்துக்கு முதல்நாள் இரவுதான் இருவரையும் ஒன்றாக கண்டேன். அந்த நபர் கணவனா, காதலனா என்று தெரியாது. அதன்பின் மறுநாள் காலை 8.20 மணியளவில் நான் விடுதிக்கு சென்றபோது அவர் கொண்டு வந்த சூட்கேஸ்களை முச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தார். இறுதியாக பெரிய சூட்கேஸை அறையிலிருந்து வெளியில் எடுத்து கொண்டு போகும் போதே அவர்கள் தங்கியிருந்த அறையின் அருகே சென்றேன்.

அவர் மிகுந்த சிரமத்துடனேயே அதை எடுத்துச் சென்றுகொண்டிருந்தார்.

எனவே, அதற்குப்பிறகு அறைச்சாவியை என்னிடம் கொடுத்துவிட்டு அந்தப் பெண்ணின் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அதன்பின் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அன்றிரவு நான் பேஸ்புக் கணக்கில் எனது நண்பருடன் தொடர்பிலிருந்த போது எனது நண்பர் ஒருவரே இது பற்றிக் கூறினார். உடனே நானும் அந்தப் புகைப்படத்தை பார்த்தேன். எனக்கு அது பெரிதும் அதிர்ச்சியாய் இருந்தது.

எங்களுடைய விடுதியில் தங்கியிருந்த பெண் தான் அது என்பதை நான் இனங்கண்டுகொண்டேன். உடனே சீ.சீ.ரீ.வி கெமராவிலுள்ள பதிவுகளைப் பார்த்து அதை உறுதிப்படுத்திக்கொண்டு பொலிஸாருக்கு இதுதொடர்பான தகவலை வழங்கினேன் - என்று அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து குறித்த சந்தேகநபரை ஏற்றிச்சென்ற ஓட்டோச் சாரதியிடம் கேட்ட போது,

நான் இதற்கு முன்னர் குறித்த சந்தேகநபர் தொடர்பாக எதுவுமே அறிந்திருக்கவில்லை.

அன்று கடந்த 29ம் திகதிதான் முதல்முறையாக நான் அவரை சந்தித்தேன். காலை 8.00 - 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரமது. அவர் என்னிடம் வந்து புறக்கோட்டை தனியார் பஸ் நிலையத்துக்கு செல்லவேண்டும் என்று கூறினார். உடனே நானும் சம்மதித்தேன்.

அவர் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று பொதிகளை வாகனத்தில் ஏற்றினார். இறுதியாக மிகுந்த சிரமத்துடன் பெரிய சூட்கேஸ் பெட்டியொன்றை வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந்தார்.அப்போது நானும் அவருக்கு சற்று உதவினேன்.

மேலும், இந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கின்றது? இவ்வளவு பாரமாகவிருக்கின்றது என்றும் வினவினேன். எனினும் அதற்கு அவரிடமிருந்து மௌனம் மட்டுமே எனக்கு பதிலாக கிடைத்தது. அதுமட்டுமின்றி, என்னுடன் வாகனத்தில் பயணிக்கும்போதும் கூட என்னிடம் அவர் எதுவுமே பேசவில்லை. பின் புறக்கோட்டை தனியார் பஸ் நிலையத்தில் இறங்கினார். இதன்போது அவர் பதற்றத்துடன் காணப்பட்டதை என்னால் அவதானிக்க முடிந்தது. இறங்கும் போது எனக்கு கட்டணமாக ரூபா 150 வழங்கினார் - என அவர் கூறினார்.

இந்நிலையில் கார்த்திகாவின் சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய போது உயிரிழப்புக்கான தெளிவான காரணத்தை கண்டறிவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் அவரது உடற்பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் செட்டியார்தெருவிலுள்ள விடுதியில் இருவரும் விடுதிக்கு வருவது மற்றும் இறுதியாக இவர்கள் தங்கியிருந்த 5ம் இலக்க அறையிலிருந்து சந்தேகநபர் பெட்டியொன்றை வெளியில் எடுத்து வருவது போன்ற காட்சிகள் சீ.சீ.ரீ கமராவில் பதிவாகியுள்ளதால் சந்தேகநபரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். அத்துடன் அந்த சூட்கேட்ஸ் பெட்டியை பெஸ்டியன் மாவத்தையிலுள்ள பஸ்நிலையத்துக்கு கொண்டு சென்றமைக்கான ஆதாரங்களாக சீ.சீ.ரீ.வி காட்சிப் பதிவுகளையும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். எனவே கார்த்திகாவுடன் விடுதியில் தங்கியிருந்தவர் யார்? அவரது கணவனா? என்ற பின்னணியில் சந்தேகநபர் தொடர்பாக பொலிஸாரின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கார்த்திகாவின் கணவர் என்று சந்தேகிக்கப்படும் 34 வயதான நபரொருவரையும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார் எனவும் தெரியவருகின்றது மேலும், இவரிடமும் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆட்சியில் இருந்தபோது 2,500 ரூபாவை வழங்காத மஹிந்தவா உங்களுக்கு 25,000 ரூபாவை வழங்கப்போகிறார்?

## அனுர குமார திசாநாயக்க தெரிவிப்பு

(வத்துகாமம் நிருபர்)

ஆட்சியில் இருக்கும்போது தான் வழங்குவதாகக் கூறிய 2500 ரூபா வாக்குறுதியை வழங்காத மஹிந்த அடுத்த ஆட்சியில் எப்படி 25,000 ரூபா வழங்கப் போகிறார். இவை சுவர்க்கலோகத்துக் கதைகளாகும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார். கண்டியில் இடம்பெற்ற அரசியல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

20 வயதில் ஒரு சாதாரண எம்.பியாக இருந்தவர் பல்வேறு அரசியல் உயர்பதவிகளையும் பெற்று ஓய்வுபெற்று, ஓய்வை எதிர்கொள்ளும் 70 ஆவது வயதில் மீண்டும் ஒரு எம்.பியாகவர முயற்சிப்பதாயின் அவரின் அரசியல் பேராசை எப்படியானது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

1970 ம் ஆண்டு ஒரு எம்.பியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ அதன்பின் எதிர்கட்சித் தலைவரானார். பின்னர் நாட்டின் பிரதமரானார். அதன்பின் இரண்டுமுறை ஜனாதிபதியாகத் தெரிவானார். எனினும், தனக்கு மேலும் அரசியலில் இருக்க முடியாது என நினைத்து இரண்டுவருட காலம் மீதமாக இருக்கும் போதே ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் சென்று தனது கட்சியின் செயலாளருக்கு ஜனாதிபதிப் பதவியை தாரை வார்த்தார். அப்படியாயின் அவர் மிக நிம்மதியாக வீட்டிலிருந்து ஓய்வு எடுக்கவேண்டியவர். ஆனால் அரசியலில் புகுந்து பிரதமராக முயற்சிப்பது அரசியலில் ஒரு கேலிக் கூத்தாகி விட்டது. இதை விடக் கூடிய ஒரு உயர்பதவியில் இருந்தவர் அதனைவிடக் குறைந்த தரத்தைக் கொண்ட ஒரு பதவிக்கு ஏன் போட்டியிடுகின்றார் எனச் சிந்தித்தீர்களா? பொதுமக்கள் மீது கொண்ட பற்றோ அல்லது பொதுச் சேவையில் இருந்த விருப்போ காரணமல்ல. அப்படியாயின் இன்னும் இரண்டு வருடகாலம் அதேபதவியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி பீடத்தை அலங்கரித்திருக்கலாமே.

தனது ஆட்சியில் ஊழல் இருந்தது. தனது புத்திரர்களால் ஊழல் ஏற்பட்டது, சகோதரர்கள் அரசியல்மோசடி ஊழல் முன்னெடுப்புக்களை தாராளமாகச் செய்தனர். தனது மனைவி சிரிலிய மகளிர் அமைப்பை நிறுவி அதில் மோசடி செய்தார், ஒரு மகன் றகர் வீரர் ஒருவரின் மரணத்துடன் தொடர்புபட்டுள்ளதாக நாட்டில் ஒரு கருத்து ஏற்பட்டுள்ளது. அவரது மனைவியின் பெயரில் இயங்கிய சிரிலிய மகளிர் அமைப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைப் பதிவுசெய்தவரின் ஆள் அடையாள அட்டை இலக்கம் மிக விநோதமானது. 2222222 என்ற தொடரைக் கொண்டது. இது எப்படி முடியும். ஒன்றில் அவர் 1922ம் ஆண்டு பிறந்திருக்கவேண்டும். அல்லது 2022 ம் ஆண்டு பிறக்க உத்தேசித்திருக்க வேண்டும். இதுதான் ஊழல். இவற்றிலிருந்து தப்புவதற்கான கேடயமாகவே அவர் மீண்டும் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியைத் தேடுகிறார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவர் இவரது அனைத்து ஊழல்களுக்கும் ஒத்தாசை புரிந்துள்ளார். றகர் வீரர் வசீம் தாஜுதீனின் மரணத்தை மூடிமறைக்க அத்தனை நடவடிக்கையும் அந்த பொலிஸ்மா அதிபரின் கட்டளைப்படி நடந்துள்ளது. இவை வெளியாகி விடாது தடுக்க அரசியல் கேடயம் ஒன்று தேவைப்படுகிறது. அதுதான் அவர் எதிர்பார்க்கும் எம்.பி.பதவியாகும்.

வெற்றிலைக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும் ஊழலுக்கும் திருட்டுக் கும்பலுக்கும் வழங்கும் அங்கிகாரம் என்பதை மறக்க வேண்டாம். இது மஹிந்த ஆட்சியின் சில கசப்பான உண்மைகள். அதேவிதம் ரணிலின் ஆட்சியிலும் நடந்துள்ளது. 2002ல் சுமார் 26 மாதகாலம் ஆட்சி செய்த ரணில் என்ன செய்தார். எண்ணெய்க் கம்பனிகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தார். ஐ.ஓ.சி. நிறுவனத்தை இங்கு கொண்டு வந்தார். காப்புறுதி நிறுவனங்கள் விற்கப்பட்டன. மெரைன் சேர்விஸ் நிறுவனத்திற்கு 8 ஏக்கர் நிலம் 110 கோடி ரூபாய்களுக்கு விற்கப்பட்டது. அதேநேரம் அது அமைந்துள்ள துறைமுகமும் 110 கோடிக்கு விற்கப்பட்டது. அப்படியாயின் திறைசேரிக்கு 220 கோடி ரூபாய்கள் வரவேண்டும். ஆனால் 110கோடி மட்டும் கிடைத்திருந்தது.காப்புறுதி நிறுவனமும் பல கோடி ரூபாய்களுக்கு விற்கப்பட்டு மோசடி இடம் பெற்றது.



அக்காலத்தில் ரணிலின் அமைச்சர்களில் ஒருவராகிய மிலிந்த மொரகொட இலங்கை வங்கியை விற்கும் முயற்சியில் இறங்கினார். இலாபமீட்டும் வங்கி நிறுவனங்களை விற்கவேண்டிய அவசியம் இல்லலை. 9.7 பில்லியன் ரூபா முதல் 11.2 பில்லியன் ரூபாவரை மத்திய வங்கி பிணைமுறி மோசடி நடந்தது. இதனைப் பகிரங்கமாகவே ஜனாதிபதி தெரிவித்தார். மத்தியவங்கி ஆளுநர் பதவிவிலகிக் கொள்வது நல்லது என்று கூறியிருந்தார். குற்றமற்ற ஒருவர் பதவிவிலக அவசியமில்லை. கோப் அறிக்கைக்கு தடைபோடப்பட்டது. இதனையும் ஜனாதிபதியே கூறியிருந்தார். அதனை நிறைவேற்றமுடியாது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

2006ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டுவரை ஆட்சிசெய்த ஜனாதிபதியால் அன்று மேற்கொள்ள முடியாத கற்பனைக் கதைகளையும் மனங்கவர் கருத்துகளையும் தான் ஆட்சிக்கு வந்தபின் செய்வதாகக் கூறுகிறார். இவ்வளவு காலமும் அவர் நித்திரையிலா இருந்ததார்.

புதிததாக கல்யாணம் முடிக்கும் ஜோடிகளுக்கு இரண்டு இலட்சம் தருவதாகக் கூறும் மஹிந்த தான் ஆட்சியில் இருக்கும்போது திருமணப் பதிவிற்கு 5000 ரூபா அறவிட்டார். சிலர் தமது திருமணப் பதிவுகளை மஹிந்த ஆட்சியில் செய்து கொள்ள காத்திருக்கின்றனர். காரணம் அவரது இரண்டு இலட்சங்களைப் பெற்றுக் கொள்வதற்கு. ஆனால் ஒன்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு வாழ்நாள் முழுதும் திருமணம் முடிக்கமுடியாது. ஒன்றில் மஹிந்த வெற்றிபெற மாட்டார். தவறியாவது வெற்றிபெற்றாலும் பணம் தரமாட்டார். சுவனத்து பேச்சுக்களை நம்ப வேண்டாம். ஆனால் நாமல் பேபியும் யோசித பேபியும் இன்னும் திருமணம் முடிக்க வில்லை. அவர்களுக்கென்றால் இந்த லட்சங்கள் கிடைத்து அதற்கங்காலும் கிடைக்கும்- என்றார்.




# மஹிந்தவிற்கு எதிராக ஐ.நாவில் முறைப்பாடு செய்யப்படுமாம்!

## குருநாகல் மாவட்ட வேட்பாளர் சிவாஜிலிங்கம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்ய உள்ளதாக வடமாகாணசபை உறுப்பினரும், குருநாகல் மாவட்ட வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது பாதுகாப்புப் படையினர் வடக்கில் பெரும் எண்ணிக்கையிலான அப்பாவி மக்களை படுகொலை செய்திருந்தனர். இந்த குற்றச்செயல்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பொறுப்பு சொல்லவேண்டும்.

இவர்களுக்கு எதிராக சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி வடக்கு அரசியல் கட்சிகளின் கையொப்பங்களுடன் கூடிய மகஜர் ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளேன்.

வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்படும்;.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தியபோதிலும், பொதுமக்கள் கொலைகள் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை மீதான நம்பிக்கை குறைவடையக் கூடும். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என எம்.கே. சிவாஜிலிங்கம் பிரதான சிங்கள வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு நேர் காணல் வழங்கியுள்ளார். இந்த செவ்வியே குறித்த சிங்களப் பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நேர்காணல்கள் மஹிந்த ராஜபக்ஷ தரப்பின் வாக்கு எண்ணிக்கையை மேலும் மேலும் அதிகரிக்கக் கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அழைத்தால் இணையத் தயார்! - கூட்டணி விஞ்ஞாபனம்

தமிழ்தேசியக் கூட்டமைப்பு அழைத்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி இனத்தின் நன்மை கருதி மீள இணைந்து கொள்ள தயார் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில், இன ஒற்றுமையை வலியுறுத்தி தமிழர் விடுதலைக்கூட்டணி பல அறிக்கைகளை வெளியிட்டது. அதனையடுத்து வட மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் எமது கட்சியின் செயலாளர் நாயகத்தினை கிளிநொச்சி மாவட்டத்தில் நிறுத்தியிருந்த போதிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பிலுள்ள சிலரால் கூட்டணி தோற்கடிக்கப்பட்டது.

எது எவ்வாறாயினும் இன்றும் ஒன்றுபட வருமாறு அழைப்பு விடுத்தால் இனத்தின் நன்மைகருதி நடந்ததை மறந்து இணைந்து செயற்பட கூட்டணி தயாராக உள்ளது. நாட்டில் பல்வேறு இன மக்கள் இன வேறுபாட்டை மறந்து ஒருவரோடு ஒருவர் சமாதானமாகவும் சம உரிமையோடும் வாழும் நிலை உருவாகும் வரை இனப்பிரச்சினைக்கு இந்திய முறையிலான அமைப்பை அமுல்படுத்த அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படும்.

13 ஆம் அரசியல் அமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துமாறும் அழுத்தம் கொடுக்கும். அத்துடன் 1995 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டமும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். தடுப்புக்காவலிலுள்ள கைதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக சிலர் கூறிவந்தாலும் அப்படி எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்ற அமைச்சரின் கூற்று அதிர்ச்சியை தருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இம்முறை தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் 10 மேற்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும்

## திருமலை வேட்பாளர் எம்.எஸ்.தௌபீக்

(கந்தளாய் நிருபர் எப்.முபாரக்)

நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் பத்துக்கும் மேற்பட்ட ஆசனங்களை கைப்பற்றும். இந்த நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும் அதில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் மேலோங்கி காணப்படும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளக போக்குவரத்து பிரதியமைச்சரும், ஐக்கிய தேசிய முன்னணியின் முதன்மை வேட்பாளருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

கந்தளாயில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இந்நாட்டில் முஸ்லிம் மக்களின் நாடித்துடிப்புள்ள கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் காணப்படுகின்றது. அக்கட்சியின் தலைவர் எவ்வாறு சாணக்கியமான முறையில் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றாரோ அதன்மூலம் வேறு கட்சிகள் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று நாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் என்றாலே அதன் பங்களிப்புகளுடனான செல்வாக்குகள் கிழக்கில் அதிகமாகவே காணப்படுகின்றது. மக்கள் இணைந்து எவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினார்களோ அதேபோன்று அதன் பலத்தையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு காட்ட வேண்டும் - என்றார்.

# பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்யத்தவறியதை நாம் வெளியிலிருந்து செய்து காட்டியுள்ளோம்!

## பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தெரிவிப்பு

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் செய்ய முடியாது போன சமூகக் கடமைகளை அதற்கு வெளியே இருந்து நாம் செய்து காட்டியிருக்கிறோம் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் அண்மையில் காத்தான்குடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரச் சின்னத்தில் 2ம் இலக்க வேட்பாளராக போட்டியிடும் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் ஆணையைப்பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை மறந்து செயற்படுவது விசனத்துக்குரியதாகும். கடந்த காலங்களில் இந்தநாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இன மதவாத வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதனை எதிர்த்து குரல்கொடுக்காது தமது அரசியல் இருப்புகளை பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் செயற்பட்டமையை மக்கள் அறிவர். தம்புள்ளை மற்றும் ஏனைய பிரதேசங்களில் மஸ்ஜிதுகள் தாக்கப்பட்டபோதும், மத விவகாரங்களை சுதந்திரமாக நிறைவேற்ற விடாமல் தடுத்த போதும் பர்தா, ஹலால் போன்ற பல்வேறு விவகாரங்கள் தலைதூக்கிய போதும் அவற்றை எதிர்த்து குரல் கொடுக்காமல் தாம் சார்ந்த அரசியலை ஸ்திரப்படுத்துவதில்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் அக்கறைகாட்டி வந்தனர். கிறிஸ் மனிதன், வெள்ளை வேன் என பயங்கர சம்பவங்கள் நடந்த போதும், அவை கட்டுக்கதைகள் என்றனர்.

இந்த நிலைமைகளில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எந்தவித பாராளுமன்ற உறுப்புரிமையும் இல்லாத நிலையில் மஹிந்தவின் பயங்கரமான அராஜக அடக்குமுறை அரசியலுக்கு மத்தியிலும் இப்பிரச்சினைகளை தேசியத்திற்கும் சர்வதேசத்திற்கும் முன்கொண்டு சென்றது. மக்களுக்கு அவ்வப்போது விழிப்புணர்வுவை ஏற்படுத்தியது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கை வந்தபோது அவரை பகிரங்கமாக சந்தித்து முஸ்லிம்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கை கொடுத்தது. இவ்விடயம் தொடர்பாக நமது நாட்டில் அக்கறையுடன் செயற்பட்ட அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா, முஸ்லிம் கவுன்சில் போன்ற சிவில் அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு முயற்சிக்க வேண்டுமேயல்லாது அதனை மூடிமறைப்பதும் திரிபுபடுத்துவதும் சமூகத்துரோகமாகும். இத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் மீண்டும் மக்கள் ஆணையினை வேண்டி தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்களுக்கு மக்கள் தகுந்தபாடம் புகட்டுவார்கள். சமூகம் சார் கடமைகள் என்னவென்று தெரியாதவர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யாமல் தகுதிவாய்ந்த சமூக அரணாக செயற்படக்கூடிய ஆளுமையும் துணிவும்கொண்ட பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யவேண்டும் - என்றார்.

# எந்நேரமும் சயனைட் குப்பிகளுடன் திரிந்த தமிழ் இளைஞர்கள் அரசியலில் நுழையும் சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு மறுத்துவிட்டது

## கூறுகிறார் முன்னாள் கூட்டமைப்பு எம்பியும் ஐ.ம.சு.மு. வேட்பாளருமான பியசேன

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

எந்நேரமும் சயனைட் குப்பிகளுடன் ஆவேசம் பிடித்துத் திரிந்த தமிழ் இளைஞர்கள் அரசியலுக்குள் நுழைய சந்தர்ப்பம் கேட்ட போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அதனை மறுத்துவிட்டனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பியும் தற்போதைய அம்பாறை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான பொடியப்பு ஹொமி பியசேன தெரிவித்தார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அங்கு தொடர்ந்து பேசிய போது அவர் தெரிவித்தாவது,

போராளிகள் தமிழ் மக்களுக்காக தங்களைத் தியாகம் செய்தவர்கள். ஆனால், அவர்கள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி தாங்களும் தமிழ் அரசியல்வாதிகளோடு இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்று வேண்டுகோள் விடுத்த பொழுது கூட்டமைப்பினர் அதனை நிராகரித்து விட்டனர்.

ஏனென்றால் தங்களை விட மாற்று அரசியலாளர்கள் தமிழ் மக்களுக்குள் இருந்து உருவாகிவிடக் கூடாது என்பதில் கூட்டமைப்பினர் மிகக் கவனமாக இருக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஷ அரசு துப்பாக்கிக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து தமிழ் மக்களை நிம்மதியாக வாழவைத்த நன்றி விசுவாசத்திற்காகத்தான் நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றேன் - என்றார்.



பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று தலவாக்கலை நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரின் பாரியார், நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் திலகராஜ் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான நவீன் திஸாநாயக்க என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படப்பிடிப்பு - க.கிஷாந்தன்)

# மைத்திரிபால ஆட்சியில் சிறுபான்மையினர் பிரச்சினைக்கு தீர்வு

## யாழ். முதன்மை வேட்பாளர் அங்கஜன்



(எம்.கே.எம். முனாஸ்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகம் இழந்த பல உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது என யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நவமணிக்காக அவர் அளித்த பேட்டியிலே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் இரு சிறுபான்மை என்ற பேச்சுக்கு இடமில்லை. சுதந்திரத்தை அடைய வேண்டிய காலகட்டத்தில் இருக்கும் எமது தேவையும் தமிழ், முஸ்லிம் என பேதம் மறந்து ஒன்றுபட வேண்டிய காலம் வந்துள்ளது.

தமிழ், முஸ்லிம் சிறுபான்மை என்று கணிப்பிடப்பட்டுள்ள நாம் இந்நாட்டில் புதிய மாற்றத்தைக் கொண்டுவருவதில் செயற்பட்டு வருகின்றோம்.

நாட்டின் அபிவிருத்தியில் எமது பங்களிப்பு அதிகம் காணப்பட்டாலும் முதலில் எமது பிரதேசத்தின் புதிய மாற்றத்திற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இந்த மாற்றத்திற்காக நாம் தேசிய கட்சியை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என்று சிதறி வாழும் சிறுபான்மையினத்தவர்கள் தமது பிரதேசம், எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டுமென்றால் சிறுபான்மையினரை ஆதரிக்கும் ஒருவரைத் தான் தெரிவு செய்ய வேண்டும். அதற்கு ஏற்றவர் சிறுபான்மையினத் தோழரான மைத்திரிபால சிறிசேனவே. இவர் பதவி வகிக்கவுள்ள ஐந்த வருடத்திற்குள் சிறுபான்மையினர் தாம் இழந்த உரிமையை மீளப் பெறுவர் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

இளைஞர்களை இலக்காக வைத்து செயற்படக்கூடிய ஜனாதிபதி புதிய தலைமுறைக்கு ஒரு புதிய வழியை காட்டக்கூடிய ஆற்றல் உள்ளவர்.

எமது புதிய யாழினை நோக்கிய சிந்தனைக்கு தனது பூரண ஆதரவைத் தருவதாகவும் வாக்களித்துள்ளார். அதில், போதைப்பொருள் பாவனையற்ற சமுதாயத்தை உருவாக்குதல், இனத்திற்கான அரசியல்தீர்வை உள்நாட்டில் உருவாக்குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல், அனைவருக்கும் வீட்டுத்திட்டம், பெண் தலைமைத்துவகுடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள், வலிவடக்கு மீள்குடியேற்றம் வீதியில் நிற்கும் இளையோரை அலுவலகங்களுக்கு அனுப்புதல், கல்வியை மேல்நாட்டு தரத்துக்கு கூட்டுதல், கறைபடியாத கைகளுடன் புதிய சமுதாயம், இருண்ட யுகம் நீக்கி அனைவருக்கும் மின்சாரம், விவசாய ஊக்குவிப்பு, சுயதொழில் முயற்சி, மீன்பிடி ஊக்குவிப்பு, கிராம அபிவிருத்தி என்பன எனது முன்னெடுப்புக்களாகும்.

இதுதவிர, யுத்தவன்முறையில் காணாமல் போனோரின் பிரச்சினைகளுக்கும் கண்ணீரைத் துடைப்பதற்கும் ஜனாதிபதி ஊடாக நேரடித் தீர்வை பெற்றுத் தருவேன் என்றார்.



புத்தளம் மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலுக்காக போட்டியிடும் புத்தளம் தொகுதி ஐ.தே. கட்சி வேட்பாளர்களை ஆதரித்து புத்தளம் நகரில் இடம் பெற்ற கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் உரையாற்றுவதையும் அமைச்சர் ரவூப் ஹக்கீமை டாக்டர் ஐ.எம். இலியாஸ் மற்றும் அமைச்சர் றிஷாத் வரவேற்பதையும் புத்தளம் மாவட்ட வேட்பாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம் ( ஏ.என்.எம். முஸ்பிக் )

# பதுளை முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கு உழைப்பேன்

## வேட்பாளர் லத்தீப் மௌலவி

(அபூருமைஸ்)

பதுளை மாவட்ட முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசார அபிவிருத்திக்காக உழைக்க முன்வருவேன். மாணவர்களின் உயர்கல்வி விருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பேன் என பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் லத்தீப் மௌலவி தெரிவித்தார்.

வெலிமடைத் தொகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது.

வரும் பாராளுமன்ற தேர்தல் இந்நாட்டு முஸ்லிம்களை பொறுத்த மட்டில் முக்கியமான தேர்தலாகும். முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை பெற்றுக் கொள்வதற்கு கிடைத்திருக்கும் இறுதிச் சந்தர்ப்பமாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவற விடாது பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

பதுளை மாவட்ட முஸ்லிம் மக்கள் கட்சி பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. பதுளை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றம் செல்ல முடியாது என்ற சிந்தனையிலிருந்து விடுபட்டு ஒற்றுமைப்பட்டு செயற்பட அனைத்து முஸ்லிம்களும் தயாராக வேண்டும் என்றார்.

# வெலிமடையில் பதற்றம் தனிய உதவிய சகலருக்கும் முஸ்லிம்கள் நன்றி

(அபூருமைஸ்)

வெலிமடையில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவிய பீதி நிலை கலைந்து தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவிய ஹரீன் பெர்னாண்டோ, ரொஷான் பெர்னாண்டோ ஆகியோருக்கு முஸ்லிம் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ம் திகதி இச்சம்பவம் வெலிமடை நகரில் இடம்பெற்றது. நகரில் ஏற்பட்ட பதற்றநிலையை தணிப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுத்த மாகாண முதலமைச்சர் ஹரீன் பதுளை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு உத்தரவிட்டார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோவின் பணிப்புரையின் பேரில் உடனடியாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

பதுளை மாவட்ட பொலிஸ் நிலையங்களில் இருந்து 300இற்கு மேற்பட்ட பொலிஸாரும் விஷேட அதிரடிப்படையினரும் வெலிமடை நகரிலும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறாத வகையில் பாதுகாப்பு வழங்கினர்.

சம்பவத்தில் மரணமான இளைஞர்களின் மரண ஊர்வலத்தின் போது தாக்குதல் நடத்தும் முயற்சி பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது. பொலிசாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்தது. அதன்போது 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின் பின்னரும் எஸ்.டி.எப். பாதுகாப்பு ஒருவாரகாலத்துக்கு மேலாக வழங்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. இதற்காக பலவேறு வழிகளில் பலரும் முயற்சி எடுத்தனர்.

பதுளை மாவட்ட மு.கா. அமைப்பாளர் ரொனி மஃரூபின் வேண்டுகோளின் பேரில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பதுளை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் லத்தீப் மௌலவி மற்றும் மாகாண அமைச்சர் ரவீந்திர சமரவீர, மாகாண அமைச்சர் வடிவேல் சுரேஷ் ஆகியோரும் இது விடயத்தில் கரிசனை செலுத்தினர். முஸ்லிம் மக்கள் இச்சம்பவத்தின் போது உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.



கெகிராவ, கனேவல்பொல பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது வேட்பாளர் ஏ.ஆர்.எம். இஸ்ஹாக் உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படம் - கலாவெவ நிருபர் டப்ளியூ எம். பைசல்)

# இனவாதம் பேசுவோருக்கு எதிராகக் குரல் கொடுப்பேன்

## உப்புக்குளத்தில் அமைச்சர் றிஷாத்



(மன்னாரிலிருந்து இர்ஷாத் றஹ்மத்துல்லா)

எவர்கள் இந்த மாவட்டத்தில் இனவாதம் பேசி மக்களை பிளவுபடுத்த விரும்புகின்றாரோ அவர்களுக்கெதிராக நாம் அச்சமின்றி குரல் கொடுப்போம் என வன்னி மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணியில் யானைச் சின்னத்தில் போட்டியிடும் முதலாம் இலக்க வேட்பாளரும், அமைச்சருமான றிஷாத் பதியுதீன் கூறினார்.

மன்னார் உப்புக்குளத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேதற்கண்டவாறு கூறினார்.

இன்று சிலருக்கு இந்த உப்புக்குளத்தின் மீது அக்கறை ஏற்பட்டுள்ளது. உப்புக்குளம் மக்களுக்கு பிரச்சினை என்று வருகின்ற போது அதனை துடைக்க வராதவர்கள் இன்று இங்கு வந்து சிலருக்கு பணம் கொடுத்து அரசியலை செய்கின்றனர். அந்தப் பணத்துக்கு சோரம் போய் எமது மக்களை காட்டிக் கொடுக்கும் இப்படிப் பட்டவர்கள் தொடர்பில் நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்த நாட்டு முஸ்லிம்களையும் தமிழர்களையும் அச்சப்படுத்தும் வேலையினை செய்த மஹிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்ய சிலர் முயற்சிக்கின்றனர். இவர்களது எண்ணம் தான் மட்டும் பொருளாதார ரீதியில் நன்மையடைந்தால் போதும் இந்த சமூகம் எக்கேடு கெட்டாலும் போதும் என்று சிந்திக்கின்ற ஒரு கூட்டம் இன்று இந்த பிரதேசத்திற்கு வந்து ஒரு சில ஆயிரங்களை கொடுத்து அலுவலகம் திறந்துள்ளனர்.

எமது மக்களின் தேவைகள் நிறைய இருக்கின்ற போது அது தொடர்பில் இவ்வளவு காலமாக எதனையும் செய்யாத இந்த நபர்கள் இன்று இம்மக்கள் தொடர்பில் கண்ணீர் வடிக்கின்றனர். இவர்களின் பின்னால் சென்று இந்த மக்களுக்கு கிடைக்கவிருக்கின்ற நன்மைகளை இல்லாமல் ஆக்கிவிடாதீர்கள். நீங்கள் இவ்வாறு செயற்படுவதானது இம்மக்களுக்கும் இம்மாவட்டத்துக்கும் செய்யும் துரோகத்தனமாகும்.

உப்புக்குளம் என்பது மன்னாரின் தலைவாயிலாகும். இங்கு வசிக்கும் இளைஞர்கள் வீரமுள்ளவர்கள். அவர்கள் ஒரு போதும் அஞ்சுக்கும் கோடிக்கும் விலை போகாதவர்கள். அவர்கள் வீரமுள்ளவர்கள், கோழைகளல்ல. சமூகத்திற்காக எவ்வித எதிர்பார்ப்புமின்றி தம்மையே தியாகம் செய்யும் துணிவு கொண்டவர்கள் என்பதை நான் பகிரங்கமாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறுபான்மை சமூகத்தின் ஓட்டு மொத்த அரசியல் உரிமையினை விலை கொடுத்து வாங்கி, அவர்களுக்கு ஆயுட்கால விலங்கிட வெற்றிலையில் போட்டியிடும் வேட்பாளர்கள் திட்டங்களை தீட்டிவருகின்றனர். தன்மானம் உள்ள சமூகத்தை உயிர் மூச்சாக சுவாசிக்கும் எந்தவொரு நபரும் வெற்றிலைக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்றும் அமைச்சரும் வேட்பாளருமான றிஷாத் பதியுதீன் கூறினார்.

# மைத்திரி ஆட்சியில் தேர்தல் சட்டங்கள் சீராக அமுல்படுத்தப்படுகின்றன

## அதுரலியே ரதன தேரர்



(ஏ.எச்.எம். இர்பான்)

இம்முறை பொதுத் தேர்தலில் அரசாங்கத்தின் வளங்களையும் அதிகாரத்தையும் உபயோகித்து தேர்தலில் ஈடுபட முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் சட்டங்களை ஒழுங்கான முறையில் நிறைவேற்றி அதனைசரியானமுறையில் நடைமுறைப்படுத்துகின்றார் என்றும் அத்துரலியே ரதன தேரர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் பூகொட குமாரிமுல்லையில் இடம்பெற்றபோதே முன்னாள் கம்பஹா மாவட்ட எம்.பியும் தேசியப் பட்டியல் வேட்பாளருமான அதுரலியே ரதன தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று நாட்டில் அரசியலமைப் புத்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்நாட்டில் மீண்டும் ஜனாதிபதியாக வர முடியாது. பிரதமராகவே முடியும். அதனையும் தற்போதைய ஜனாதிபதி வழங்குவதில்லையென குறிப்பிட்டுள்ளார். அன்று நாட்டில் நீதிமன்றங்களை நிர்வாகம் செய்தது மஹிந்தவிற்கு தேவையான முறையில் அவரின் குடும்பத்தின் விருப்பு வெறுப்பிற்கு அமையவே. இன்று ஜனாதிபதி தமக்கு விருப்பமான முறையில் நீதிமன்றங்களுக்கு நியமிக்கும் முறையை நிறுத்தியுள்ளார்.

இந்நாட்டில் ஒவ்வொரு ஐம்பது பேருக்கொருவர் என்ற அடிப்படையில் மதுபான புகைத்தல் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகியுள்ளனர். முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்களுடன் நெருங்கிய தொடர்புடைய நபர்களே ஹெரோயின், எதனோல் போன்றவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தனர். இன்று நல்லாட்சிக்கான எமது அரசாங்கம் இவற்றை இல்லாதொழிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இக்கூட்டத்தில் கம்பஹா மாவட்ட அபேட்சகர்களான ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, சதுர சேனாரட்ன, ஷாபீ ரஹீம் ஆகியோரும் உரையாற்றினர்.



இப்பலோகம பிரதேச சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாமில் இன மத வேறுபாடு இன்றி நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

(தகவல்: கே.அஸீம் முஹம்மத் படம் - ரில்வான்)

# வெலிகமையில் 100 வயது மூதாட்டி காலமானார்

(வெலிகம நிருபர் எம்.யூ.எம். வாலிஹ்)

வெலிகம கல்பொக்கை மொகமட் லேனில் வசித்து வந்த 100 வயது மூதாட்டியொருவர் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

பாத்திமா ஸஹரா எனும் இம் மூதாட்டி வெலிகமயைச் சேர்ந்த பிரபல வியாபாரி மர்ஹூம் ஏ.ஆர்.எம். முகம்மது ஹாஜியாரின் மனைவியாவார்.

இவரது பெயரிலே அவரின் வீட்டுக்கு முன்னால் செல்லும் குறுக்கி வீதி மொகமட் லேன்' எனும் பெயரில் அமைக்கப் பட்டுள்ளது.

பாத்திமா ஸஹரா எனும் மூதாட்டிக்கு ஏழு ஆண்பிள்ளைகள் மற்றும் நான்கு பெண் பிள்ளைகளுமாக 11 பேர் உள்ளனர்.

இவர், 97 பேரன், பேத்திகளைக் கண்டுள்ளார். வெலிகம கல்பொக்க கிராமத்தில் மூத்த பெண்மணி இவராவார்.

இவரது ஜனாஸா நல்லடக்கம் அன்றைய தினம் வெலிகம முஹியத்தீன் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

# கட்சி தாவும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டாம்



## ஜே.வி.பி.கண்டி மாவட்ட வேட்பாளர்-மன்சில் முத்தாலிப்

(வத்துகாமம் நிருபர்)

கடந்த 67 வருடங்களாக மாறி மாறி வந்த அரசுகள் நாட்டை அழிவுப் பாதையிலேயே கொண்டு சென்றுள்ளன. தேர்தல் காலத்தில் வந்து முஸ்லிம் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்ற பின் கட்சி தாவி முஸ்லிம்களுக்கு பாதகமான ஆட்சிகளை அமைக்கத் துணை போகும் அரசியல்வாதிகளுக்கு வாக்களித்து ஏமாற்றமடைய வேண்டாம் என்று கண்டி மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் மன்சில் முத்தலிப் தெரிவித்தார்.

அண்மையில் கண்டி நகரில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் இன்று வரை ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியையும் பிரதானமாகக் கொண்ட கூட்டமைப்புகளே நாட்டை மாறி மாறி ஆட்சி செய்துள்ளன. ஆனால் நாடு தினம் வறுமையை நோக்கியும் அழிவை நோக்கியுமே சென்று கொண்டுள்ளது.

தேர்தல் ஒன்று வரும் போது கண்டி மாவட்டத்திற்கு வரும் ஒரு முஸ்லிம் தலைவர் என்று சொல்லிக் கொள்வோர் நான் தான் முஸ்லிம்களில் தலைவர் என்று கூறுவது மட்டுமல்லாது கவர்ச்சி வார்த்தைகளைக் கூறி முஸ்லிம்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்ற பின் கண்டிக்கு வருவதே இல்லை. 18 வது திருத்தச் சட்ட மூலத்திற்கு முழு முஸ்லிம் சமூகமும் எதிர்ப்பை தெரிவித்த போது அத்தகையவர்கள் அதற்கு ஆதரவு வழங்கினார்.

எதிர்வரும் தேர்தலுக்கு பின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவே இந் நாட்டில் பிரதமராவார். எனவே முஸ்லிம் மக்களும் பாரிய அளவில் மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களித்து எமது பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் கோட்பாடாகும். அதனை நாங்கள் செயல் வடிவில் செய்து காட்டுவோம் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.

# Sports

விளையாட்டுச் செய்திகள்

## ரியோ ஒலிம்பிக் ஜோதி ஓட்டம்



பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளது. இதற்கான ஒலிம்பிக் ஜோதி அடுத்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி பழமையான ஒலிம்பிக் நகரமான கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் ஏற்றப்படுகிறது.அதன்பின்னர் ஒலிம்பிக்கில் பங்குபெறும் நாடுகளுக்கு எடுத்துச்செல லப்படும் இந்த ஜோதி, 12 நாட்கள் கழித்து, மே மாதம் 3ஆம் திகதி போட்டிகள் நடைபெறும் பிரேசில் நாட்டை வந்தடையும். அதன்பின் 100 நாட்கள் பிரேசில் நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் செல்லும் ஜோதி, இறுதியில் ரியோ ஒலிம்பிக் மைதானத்தில் ஏற்றப்பட்டு முறைப்படி போட்டி ஆரம்பமாகவுள்ளது.

## இளம் வீரர்கள் அணியில் இருந்தால்

## எனது இடத்தை வழங்குவேன்!

எதிர்வரும் காலங்களில் வழமையான ஆட்டத்துக்கு மீண்டும் திரும்ப முடியாமல் போனால் புதுமுக வீரருக்கு தனது இடத்தை வழங்கத தயாரகவுள்ளதாக இலங்கை இருபதுக்கு 20 அணித் தலைவர் லசித் மாலிங்க தெரிவித்தார். பாகிஸ்தான் அணியுடன் கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது 20-20க்குப் போட்டிக்குப் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னர் காலில் ஏற்பட்ட உபாதையுடன் ஒன்றரை வருடங்கள் அணிக்காக விளையாடினேன். அதற்காக நான் தடுப்பு ஊசி மருந்துகளை பயன்படுத்தி வந்தேன். அதனைத்தொடர்ந்து சத்திர சகிச்சையொன்றையும் செய்து கொண்டேன். அதன்பிறகு உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமான காரணத்தால் என்னால் சத்திரசிகிச்சைக்குப் பின்னரும் பூரணமாக குணமடையாமல் போனது. அப்போதும் எனக்கும் வழமையான ஆட்டத்துக்கு வரமுடியாமல் போனது.ஆனால் நான் அணிக்காக தொடர்ந்து விளையாடினேன்.எனவே எதிர்வரும் காலங்களில் நான் சிறப்பாக செயற்பட்டு வழமையான ஆட்டத்துக்க வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயம் விளையாடத் தயாராகவுள்ளேன். எதிர்வரும் காலங்களில் இலங்கை அணியில் திறமையான வீரர்கள் இடம்பெற வேண்டும். நானும் ஒரு வீரரின் இடத்தை நிரப்புவதற்காக வேண்டிதான் தேசிய அணியில் இடம்பிடித்தேன். எனவே எனது இடத்தை நிரப்புவதற்கு நிச்சயம் ஒரு வீரர் அணிக்கு வருவாராயின் நான் அந்த இடத்தை வழங்குவதற்குத் தயாராகவுள்ளேன் என மாலிங்க தெரிவித்தார்.





# இலங்கைக்கு எதிரான தொடரை வெள்ளையடிப்பு செய்த பாகிஸ்தான்

(பீ.எப்.எம்.றிஷாட்)

பாகிஸ்தான் அணி கடந்த ஜுன் மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடியது. இதில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரை 2-1 அடிப்படையிலும், ஒருநாள் தொடரை 3-2 என கைப்பற்றி இலங்கை அணியை சொந்த மண்ணில் 9 வருடங்களுக்குப் பிறகு தோற்கடித்தது. இலங்கை அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் அரங்கில் பின்னடைவை எதிர்நோக்கியிருப்பதை இத்தொடர் பூராகவும் காணக்கூடியதாக இருந்தது.குறிப்பாக இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன இருவரும் இல்லாமல் இலங்கை அணி சொந்த மண்ணில் களமிறங்கிய முதலாவது தொடர் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சில அனுபவ வீரர்களைத் தவிர அணியில் இடம்பெற்ற மற்ற வீரர்கள் அனைவரும் புதுமுக வீரர்களாவே இருந்தமை இலங்கை அணிக்கு கிடைத்த சவாலாகும். இறுதியில் இலங்கை அணி பாகிஸ்தானிடம் வரலாற்று சொந்த மண்ணில் வரலாற்று தோல்வியைப் பதிவு செய்தது. நடப்பு இருபதுக்கு 20 சம்பியனான இலங்கையை இரண்டு போட்டிகளைக் கொண்ட இருபதுக்கு 20 போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என வெற்றி பெற்று இத்தொடரை வரலாற்றுச் சிறப்புமிக்க தொடராக நிறைவு செய்து நாடு திரும்பியது.இலங்கை - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதலாவது 20-20 போட்டி கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.இதில் இலங்கை அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் 2ஆவது மற்றும் கடைசி 20-20 போட்டி நேற்றுமுன்தினம் கொழுவில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பெரேரா மற்றும் டில்ஷான் முறையே 19 மற்றும் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.பின்னர் களமிறங்கிய இளம்வீரர் செஹான் ஜெயசூரிய அதிரடியாக விளையாடினார். ஒருபக்கம் வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்து வெளியேறினாலும், ஜெயசூரிய சிறப்பாக விளையாடி அவர் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.இறுதியில் கபுகெதரவின் அதிரடியில் இலங்கை 20 ஓவர்களுக்கு 172 ஓட்டங்களை எடுத்தது. இதையடுத்து. 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. அணியின் முதல் 5 வீரர்களும் இலங்கை பந்துவீச்சுக்கு மத்தியில் விரைவில் ஆட்டமிழந்தனர்.எனினும் சஹிட் அப்ரிடி அதிரடியாக விளையாடி 45 ஓட்டங்கள் எடுத்திருந்த போது செஹான் ஜெயசூரியவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.இதனால் இலங்கை அணியின் கை ஓங்கியது. இந்நிலையில் இறுதியில் களமிறங்கிய அன்வர் அலி இலங்கை பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலா பக்கமும் விரட்டியடித்தார்.இதனால் ஆட்டம் பாகிஸ்தானின் பக்கம் திரும்பியது. அவர் 17 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.இறுதியில் பாகிஸ்தான் 19.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.இந்த வெற்றியின் மூலம் 2-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் தொடரை கைப்பற்றியது.போட்டியின் ஆட்டநாயகனாக அன்வர் அலியும், தொடரின் நாயகனாக சொஹைப் மலிக்கும் தெரிவானர்.

## 5வருடங்களுக்குப் பிறகு இந்தியா இன்று இலங்கை பயணம்

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட இன்று இலங்கை வருகிறது. இதற்காக இந்திய அணி இன்று மதியம் சென்னையில் இருந்து கொழும்பு புறப்பட்டு செல்கிறது. இதற்காக இந்திய வீரர்கள் சென்னை வந்துள்ளனர். அவுஸ்திரேலிய ஏ அணிக்கு எதிரான போட்டியில் விளையாடிய கோஹ்லி, புஜாரா, வருண் ஆரோன் ஆகியோர் ஏற்கனவே சென்னையில் உள்ளனர்.

இதேவேளை, இலங்கை - இந்தியா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலியில் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதியும், 2ஆவது போட்டி கொழும்பில் 20ஆம் திகதியும், 3ஆவது மற்றும் கடைசி போட்டி கொழும்பில் 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய அணி இலங்கை கிரிக்கெட் வாரிய தலைவர் பதினொருவர் அணியுடன் 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. இந்த ஆட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்திய அணி கடைசியாக 2010ஆம் ஆண்டு இலங்கையில் 'ற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடியது. 3 டெஸ்ட் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. முதல் டெஸ்டில் இலங்கை வெற்றி பெற்று இருந்தது. 2ஆவது டெஸ்ட் சமநிலையில் நிறைவடைந்தது. 3ஆவது டெஸ்டில் டோனி தலைமையிலான இந்திய அணி வெற்றி பெற்றது. டோனியின் ஓய்வுக்கு பிறகு கோஹ்லி சந்திக்கவுள்ள முதலாவது சவாலான டெஸ்ட் தொடர் இதுவாகும். இலங்கையை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது மிகவும் கடினமானது.இதனால் கோஹ்லி மிகுந்த பொறுப்புடன் இந்த டெஸ்ட் தொடரை கையாள வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. பாகிஸ்தான் அணி சமீபத்தில் இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் டெஸ்ட், ஒரு நாள் போட்டி மற்றும் 20-20 போட்டிகளில் வீழ்த்தி தொடரை கைப்பற்றி இருந்தது. இதனால் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் தொடரை வெல்லுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.





சிறுநீரக நோய் ஒழிப்பு விளம்பரத் தூதுவர்களாக முரளிதரன், டில்ஷான் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது 20க்கு20 போட்டியின் போதே இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறுநீரக நோய் ஒழிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்துள்ள நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.




Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 03rd August 2015